


# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 ஜனவரி 07, 2010 புரட்சி 8 முழக்கம் 52 விலை: ரூ.2.50


### எழில் குலுங்கும் திருமூர்த்திமலையில் – கருத்து மணம் பரப்பிய

# கழகத்தின் 3 நாள் பயிற்சி முகாம்



*உடுமலைப்பேட்டை திருமூர்த்தி மலையிலுள்ள ருக்குமணி மகாலில் கோவை – திருப்பூர் மாவட்ட கழகத் தோழர்களுக்கான பெரியாரியல் பயிற்சி முகாம் 2010 ஜனவரி 01, 02, 03 ஆகிய நாட்களில் மிகச் சிறப்போடு நடைபெற்றது.*

150 தோழர்கள் கலந்து கொண்ட பெரியாரியல் பயிற்சி முகாம், ஜனவரி 1 ஆம் தேதி வெள்ளியன்று காலை 11.30 மணிக்கு தொடங்கியது. திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் சு. துரைசாமி வரவேற்புரையாற்றிட, கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட தோழர்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள், பயிற்சி முகாம் நடைபெறும் வழிமுறை குறித்து தொடக்க உரையாற்றிட, முகாமில் கலந்து கொண்ட தோழர்களின் அறிமுகத்தோடு வகுப்புகள் தொடங்கின.

முகாமில் முதல் வகுப்பாக, "சமுதாய நிலை பெரியாருக்கு முன்னும் பின்னும்" என்ற தலைப்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், விரிவான செய்திகளுடன் உரையாற்றினார்.

மதிய உணவுக்குப் பின் சிற்பி இராசன், "புராணங்கள்" என்கிற தலைப்பில் 3.30 மணிக்கு வகுப்பைத் தொடங்கி கலகலப்புடன் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தினார். முகாமில் கலந்து கொண்ட இளைஞர்களுக்கு சிற்பி இராசனின் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியுடன் கூடிய விளக்கம் ஈர்ப்பைத் தந்தது.

மாலை 5 மணிக்கு படகுத்துறைக்கு எதிரே குழு விளையாட்டு தொடங்கி, 6 மணி வரை நடந்தது. 6 மணிக்கு 'பெரியாரின் அரசியல்' என்கிற தலைப்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார்.

இரவு 8 மணிக்கு இயக்குனர் பொன் சுதா இயக்கிய 'மறைபொருள்', 'நடந்த கதை' ஆகிய இரு குறும்படங்கள் திரையிடப்பட்டன.

### இரண்டாம் நாள்

ஜனவரி 02 ஆம் தேதி சனியன்று காலை சரியாக 9 மணிக்கே வகுப்புகள் தொடங்கின. இரண்டாம் நாளின் முதல் நிகழ்வாக "மார்க்சியம் - ஒரு அறிமுகம்" என்கிற தலைப்பில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க பொதுச் செயலாளர் சு. தமிழ்ச்செல்வன் உரையாற்றினார். கரும்பலகையில் எழுதிக் காட்டி எளிமையாக வகுப்பை நடத்திய முறை தோழர்களுக்கு எளிதில் புரிய வைத்தது.

11.30 மணிக்கு "பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு" என்கிற தலைப்பில் மூத்த வழக்கறிஞர் எஸ்.துரைசாமி வகுப்பு நடத்தினார்.

மதிய உணவுக்கு பின் 3.30 மணிக்கு "பெரியாரின் கடவுள் மறுப்பு" என்கிற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார்.

மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை குழு விளையாட்டு நடந்தது.

மாலை 6 மணிக்கு "சோதிடம் - உலகம் தோன்றிய விதம்" என்கிற தலைப்பில் மருத்துவர் எழிலன் தனது உரையைத் தொடங்கினார். படங்களைத் திரையிட்டு உலகம் தோன்றிய விதம் பற்றியும் அது தொடர்பாக மக்களிடம் நிலவி வருகிற சோதிடம் போன்ற மூடநம்பிக்கைகளை விளக்கி தோழர்களுக்கு காட்சியுடன் கருத்தையும் புரிய வைத்த முறை சிறப்பாக இருந்தது.

இரவு 8 மணிக்கு "பெரியார் நடத்திய போராட்டங்களின் பின்னணி" என்கிற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். பெரியாரின் போராட்டங்களில், அவரின் மனப் போராட்டங்கள் தொடங்கி, சமூகத்தின் சுயமரியாதைக்கான போராட்டங்கள் என பட்டியலிட்டு விளக்கினார்.

### மூன்றாம் நாள்

இறுதி நாளான மூன்றாம் நாளின் நிகழ்வுகள் 9 மணிக்கு தொடங்கின. "பெரியார் நடத்திய போராட்டங்களின் பின்னணி" என்கிற தலைப்பின் இரண்டாம் பகுதியை கழகத் தலைவர் கொளத்தூர் மணி தொடர்ந்தார்.

பகல் 11 மணிக்கு "கழகத்தின் களப் பணிகள்" என்கிற தலைப்பில் பெரியார் திராவிடர் கழகம் இதுவரை சந்தித்தப் போராட்டங்களைப் பற்றி, கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் உரையாற்றினார்.

மதியம் 12.30 மணிக்கு பயிற்சி முகாமின் இறுதி வகுப்பு. "பெரியாரின் திராவிடமும் தமிழ் தேசியமும்" என்கிற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் விளக்கத்துடன் கூடிய உரையுடன் நடந்தேறியது.

இறுதியாக, மூன்று நாட்களும் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட தோழர்களுக்கு தங்குவதற்கும், அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்து தந்து, தோழர்கள் எவ்வித இடையூறும் இன்றி பெரியாரியலை கற்றுக் கொள்ள ஓயாது உழைத்த உடுமலைப்பேட்டை கழகத் தோழர்கள் கழகத் தலைவரால் சிறப்பு செய்யப்பட்டனர். மேலும் மூன்று நாட்களும் மிகச் சுவையுடன் உணவை சமைத்த சுகுமார் தலைமையிலான சமையல் கலைஞர்களுக்கும், கழகத் தலைவரால் சிறப்பு செய்யப்பட்டது.

முகாமில் மூன்று நாட்களும்தங்கி பயிற்சி பெற்ற தோழர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வுடன் பயிற்சிமுகாம் நிறைவு பெற்றது.

**செய்தி: கருமலையப்பன்**

## முகாம் சிறப்புற உழைத்தவர்கள்

மூன்று நாட்கள் முகாம் சிறப்புற - நிதி வசூல் தொடங்கி, பொருட்கள் சேகரிப்பு முதல், அரங்கத்தை ஒழுங்கு படுத்துதல், சரியான நேரத்தில் வகுப்பு தொடங்குதல், சரியான நேரத்தில் தேநீர், உணவு வழங்குதல், இரவு தங்குவதற்கான ஏற்பாடுகள் என பயிற்சி முகாமின் அனைத்துக்கும் காரணமாக இருந்து பல நாட்களாக தளராது உழைத்த உடுமலைத் தோழர்கள்:

திருப்பூர் மாவட்ட கழகச்செயலாளர் கா. கருமலையப்பன், உடுமலை நகரச் செயலாளர் இரா. பாக்கியநாதன், நகரத் தலைவர் யாழ். நடராசன், உடுமலை ஒன்றியச் செயலாளர் கோ. விசு, மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர் சு. சிவானந்தம், ஒன்றிய துணைச் செயலாளர் ஜோத்தம்பட்டி மோகன், காரத்தொழுவு மயில்சாமி, உடுமலை நகர துணைச் செயலாளர் சிவசங்கர், நகர பொருளாளர் மு.வேல்முருகன், கணியூர் வெங்கடாசலம், தமிழ்ச்செல்வன், உடுமலை ரமேஷ், தேவா, தியாகராசன்.

# ‘தேசபக்தி’ புல்லரிக்குது....

*‘தீவிரவாத எதிர்ப்புக் கருத்தரங்கு’ ஒன்றை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஈ.வெ.கி.எஸ். இளங்கோவனும், தங்கபாலுவும், மயிலாப்பூரில் அண்மையில் நடத்தியிருப்பதாக, ஏடுகளில் செய்திகள் வந்துள்ளன. அதில் தீவிரவாதத்தை எதிர்த்து, இவர்கள் செய்த “வீரமுழக்கங்களை” ‘தினத்தந்தி’ நாளேடு (5.1.2010) வெளியிட்டிருக்கிறது. அந்த ‘சிந்தனை முத்துகளை’ப் படிக்கும் ‘அரிய’ வாய்ப்பு நமக்கும் கிடைத்தது. கருத்தரங்கம் முடிந்த பிறகு, தங்கபாலுவும், இளங்கோவனும் தனியே சந்தித்துப் பேசியிருந்தால், எப்படிப் பேசியிருப்பார்கள்?*

தங்கபாலுவும், இளங்கோவனும், கருத்தரங்கு முடித்து, தனியறையில் கைகுலுக்கி, கட்டிப்பிடித்து, முகம் மலர சிரித்து, தங்கள் உரையாடலைத் தொடங்குகிறார்கள்:

இளங்கோவன்: தங்கபாலு சார், தீவிரவாத எதிர்ப்பை நான் மட்டும்தான், காங்கிரசில் தனியாகப் பேசி வந்தேன். இப்போது நீங்களும் என்னுடன் சேர்ந்திருப்பது, மிகவும் மகிழ்ச்சி.

தங்கபாலு: எனக்கு மட்டும் மகிழ்ச்சி இருக்காதா? தீவிரவாதத்தை இப்போது எதிர்த்தே தீர வேண்டிய கட்டாய நெருக்கடி, கட்சிக்குள் நமக்கு இருக்கிறதே?

இளங்கோ : நீங்க, என்ன சொல்ல வர்றீங்க...

தங்கபாலு: என்ன சார், தெரியாததுபோல நடிக்கிறீங்க? கட்சிக்குள்ள, நம்ம இரண்டு அணிகளுக்கும் எதிரா, வாசன், வேகமாக வளர்ந்துகிட்டு வர்ராறே; அதைத்தான் சொல்கிறேன். இது நமக்கு எதிரான பயங்கரவாதம் தானே! இந்த பயங்கரவாதத்தை எதிர்க்கிறதுக்கு - நாம இரண்டு பேரும் தீவிரவாத எதிர்ப்பு அணியிலே கை கோர்த்து நிற்க வேண்டியிருக்கே!

இளங்கோ : சரியாகச் சொன்னீங்க... உங்க பேச்சிலேயே, தீவிரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட கட்சி, நம் கட்சி தான்னு குறிப்பிட்டீங்களே.... அப்போதே புரிஞ்சுகிட்டேன். ஆனாலும், என்னை விட, நீங்க, பெரிய துணிச்சல் காரராயிட்டீங்க....

தங்கபாலு: எப்படி, சொல்றீங்க...

இளங்கோ: “நாம் அரசியலை சேவையாக செய்கிறோம்; தீவிரவாதிகள், தொழிலாக நடத்துகிறார்கள்” என்று, ஒரு போடு போட்டீர்களே, அதைத்தான் சொன்னேன்.

தங்கபாலு: இந்த கிண்டல்தானே வேண்டாம்ங்குறேன். நான், பொறியியல் கல்லூரிகளை நடத்துறதைத் தானே குத்திக் காட்டுறீங்க.... எனக்கு தெரியாதாக்கும்.

இளங்கோ: சே.... சே.... அப்படி எல்லாம் இல்லீங்க.... நீங்க, கல்வி வியாபாரம் நடத்துறத ஏன், ஒரு தொழிலாக நினைக்கிறீங்க. அது பெரிய மக்கள் சேவையாச்சே... இந்த விடுதலைப்புலிகளை ஆதரிக்கிற தீவிரவாதிகள்தான் அடிக்கடி சிறைக்குப் போவதை தொழிலாக வச்சிருக்காங்க. நாம சேவை செய்யறோம்; அவுங்க தான் தொழில் நடத்துறாங்க; இப்போ புரியுதா?

தங்கபாலு: இப்போ நல்லா புரியுது. ஆனாலும் ஒரு சந்தேகம். காந்தி, நேரு காலத்திலேயிருந்து, ஈழத் தமிழர்களுக்கு காங்கிரஸ் குரல் கொடுத்து வருதுன்னும், ஈழத் தமிழர்களுக்கு, நேரு தான், வாக்குரிமை வாங்கித் தந்தாருன்னும் அதிரடியாக பேசியிருக்கிறீங்களே, அது என்னங்க புது வரலாறு?

இளங்கோ: எனக்கு மட்டும் தெரியுமா? என்ன கேள்வி கேக்குறீங்க? எல்லாத்தையும், காந்தி செய்தார்; நேரு செய்தார்ன்னு பேசுவதுதானே நமக்கு வரலாறு. 125 வருட காங்கிரஸ் வரலாறு தெரிஞ்சுகிட்டு, என்ன கிழிக்கப் போறோம்! வாசனை எதிர்க்க இது துரும்புக்காவது பயன்படுமா? சோனியா, ராகுல், பிரியங்கா பற்றித் தெரிஞ்சா போதும். மற்றபடி காமராசர் ஆட்சி அமைப்போம் என்று, அவ்வப்போது பேச வேண்டும். காமராசர்ன்னு, தமிழ்நாட்டில ஒரு தலைவர் இருந்தார் என்கிற அந்த ஒரு வரலாறு மட்டும் தெரிஞ்சா போதும்.

தங்கபாலு: காங்கிரஸ் வரலாறு, தத்துவம் எல்லாத்தையும் இப்போதான் தெளிவா புரிய வெச்சுருக்கீங்க. ஆனாலும், தமிழ்நாட்டுல தீவிரவாதம் தலைதூக்கி ஆடுதுன்னு நாம, தீவிரமா பேசியாகணும். இப்போ பாருங்க, எனக்கு மிரட்டல் கடிதம் வருது. உங்க வீடு, பூட்டியிருக்கும்போதே, பெட்ரோல் குண்டுகள வீசுறாங்க... இப்படி எல்லாம் சட்டத்தை கையில் எடுத்தால் நாடு என்னவாகும்?

இளங்கோ: ஓகோ, இப்ப என்ன குத்தி காட்டுறீங்களா? ஈரோட்டில் - நம்ம ஆட்கள் சட்டத்தை கைகளில் எடுத்துக் கொண்டு, பிரபாகரன் படம் போட்ட பேனர்களை எல்லாம், கிழித்து தள்ளச் சொன்னேன் என்பது உண்மைதான். நாம் சட்டத்தைக் கையில் எடுக்கலாம்; அது தேசபக்தி. அவர்கள் எப்படி பிரபாகரன் படத்தை வைக்கலாம்? அது சீனா - பாகிஸ்தான் ஊடுருவலைவிட ஆபத்தானதாயிற்றே.

தங்கபாலு: சரியாச் சொன்னீங்க. இப்போ சத்தியமூர்த்தி பவன் கூட்டத்துலேயே நாம அரிவாளால் வெட்டிக்கிறோம்; அடிச்சுக்கிறோம்; மாற்றி மாற்றி செருப்பால அடிச்சுக்குறோம்; சட்டையைக் கிழிச்சுக்குறோம்; வெளி மாநில பார்வையாளர் உள்ளாடையாக கதர் போட்டிருக்கிறாரா என்று வேட்டியைக் கிழிச்சு சோதிச்சுப் பாக்குறோம்; சுதந்திரம் வாங்கித் தந்த நமக்கு இந்த உரிமைகூட கிடையாதா? அவசரத்துக்கு காவல்துறையைக் கூட அழைக்கிறோம். இதெல்லாம், தேதசபக்திக்காக நாம நடத்துற போராட்டங்களே தவிர, தீவிரவாதம் ஆகாது. தமிழ்நாட்டில் பிரபாகரனை ஆதரிக்கிறவங்களுக்கு, இதெல்லாம் ஒரு எழவும் புரியவே மாட்டேங்குது. அதனாலதான், பிரபாகரன் படத்தையே மாட்டக் கூடாதுன்னு நாம, ஒரு போராட்டத்தை உடனே தொடங்கியாக வேண்டும்.

இளங்கோ: அப்படின்னா, நாடாளுமன்றத்திலேயே குண்டு வீசிய பகவத்சிங் படத்தை, நாடாளுமன்றத்திலேயே மாட்டியிருக்கிறீர்களே, அது சரிதானா என்று கேக்குறாங்களே, அதற்கு என்ன சார் பதில் சொல்றது? நம்ம தெலுங்கானா காங்கிரஸ்காரங்க, தனி மாநிலம் கேட்டு, பதவியை தூக்கி எறிஞ்சிட்டு, வீதிக்கு வந்து சட்டத்தை கையிலெடுத்துக் கொண்டு போராடுறாங்களே.

தங்கபாலு: இதெல்லாம் ஒரு கேள்வியா? தெளிவா சொல்லுங்க. நாம சட்டத்தை கையிலே எடுத்தா அது தேசபக்தி; பிரபாகரன் படத்தை வைத்தாலே அதுக்கு பேரு பயங்கரவாதம்.

இளங்கோ : நல்லா, புரிஞ்சுகிட்டேங்க.... நீங்க, காங்கிரசை, இப்பதான் காந்தி காட்டிய வழிக்கு அழைச்சிக்கிட்டுப் போறீங்க...

தங்கபாலு : அது, எப்படி சொல்றீங்க?

இளங்கோ: காந்தி, சுதந்திரம் வாங்கின கையோட காங்கிரசை கலைச்சிடுங்கன்னு சொன்னாரே, நாம கேட்காம விட்டுட்டோம். நீங்கதான், காந்தி கண்ட கனவை, நினைவாக்குறீங்க. அது சரி, கூட்டணி மாறுவது கொள்கையான்னு, பேசியிருக்கீங்களே, இதை எப்படிங்க சகிச்சுக்குறது? நம்ம தமிழக காங்கிரசு வரலாறே - அவ்வப்போது கூட்டணி மாறுவது தானே?

தங்கபாலு : நாம கூட்டணி மாறினா, அதுக்குப் பேரு கொள்கை கூட்டணி. மற்ற கட்சிகள் மாறினா, அது கொள்கையற்ற கூட்டணி. நாம சட்டத்தைக் கையில் எடுத்தா - அது தேச பக்தி. மற்றவங்க புலிகளை ஆதரித்து கூட்டங்களில் பேசினாலேயே - அது தீவிரவாதம். அம்மா இந்திரா சுடப்பட்டபோது மூவாயிரம் சீக்கியர்களை டெல்லியில் ஒரே நாளில், நம்ம ஆளுங்கதானே காலி பண்ணுனாங்க. அதெல்லாம் தேசபக்தி தானே. நல்லா புரிஞ்சுக்குங்க. தேசபக்தி, தேச கவுரவம் என்பதில் நமக்குன்னு தனி பாரம்பர்யம் இருக்கு! நாமெல்லாம் காந்தி வழி வந்தவங்க. காந்தி குல்லா போடுற பாரம்பர்யம்.

இளங்கோ: ஆமாங்க; நம்ம ஆந்திர ஆளுநர் என்.டி. திவாரிகூட காந்தி குல்லா போடுறவருதான். அது பாருங்க. பெண்களுடன் படுக்கையறைக் குள்ளே போறப்ப, குல்லாவை கழட்டி வச்சிட்டு, அதற்கான மரியாதை தராரு பாருங்க. அவரோட அந்த தேசபக்தி புல்லரிக்குதுங்க.

தங்கபாலு: அதனாலதான், பெருந்தன்மையோடு பதவி விலகி, ஜனநாயகத்தின் ‘கற்பை’ காப்பாத்திட்டதா, நம்ம கட்சியே அறிக்கை விட்டிருக்கு; இதெல்லாம், இந்த விடுதலைப் புலி ஆதரவாளர்களுக்கு புரியவே புரியாது!

இளங்கோ: இப்படி, நாம அடிக்கடி கலந்து பேசி, மனம் விட்டு விவாதிச்சா தான் நமக்குள்ள ஒருமைப்பாட்டை வளர்த்து, வாசன் கோஷ்டியை தனிமைப்படுத்தி, தேசபக்தியைக் கட்டிக் காப்பாத்த முடியும்.

தங்கபாலு: ஆமாம்! ஆமாம்! கடைசியா ஒரு விண்ணப்பம். கள்ளுக்கடைய திறக்கக் கூடாதுன்னு நீங்க போராட்டம் நடத்தினப்போ, நான் கள்ளுக் கடைகளை திறக்கனும்னு அறிக்கை விட்டதையெல்லாம், இப்ப மறந்திடுங்க. கடந்த தேர்தலில், உணர்ச்சியுள்ள தமிழர்கள் இருந்ததாலேதான், நாம இரண்டு பேருமே மண்ணைக் கவ்வினோம். எனவே தமிழன்ங்குற உணர்ச்சிய மழுங்கடிச்சாதான் நமக்கு வாழ்வு, எதிர்காலம். அதுல மட்டும் சத்தியமா நாம உறுதியா இருக்கணும். வரட்டுமா?

**– கோடங்குடி மாரிமுத்து**

## திண்டுக்கல், தேனி மாவட்டக் கழகப் பயிற்சி முகாம்

திண்டுக்கல் - தேனி மாவட்டத் தோழர்களுக்கான பெரியாரியல் பயிற்சி முகாம் ஜன.9,10 ஆம் தேதிகளில் திண்டுக்கல்லில் நடக்கிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சரசுவதி, சிற்பி ராசன் ஆகியோர் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறார்கள். திண்டுக்கல் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்துள்ள இந்த முகாமில் இரண்டு நாள்கள் முழுமையாகத் தங்கிப் பயிற்சி பெறுவோர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.


மாவட்டத் தலைவர் துரை சம்பத், மாவட்டச் செயலாளர் க.சூ. இராவணா, அமைப்பாளர் நல்லத்தம்பி, தாமரைக் கண்ணன் முகாமுக்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

## சேலம் நகரில் 8 நாள் தொடர் பிரச்சாரம்

சேலம் நகரில் ஜனவரி 5 ஆம் தேதியிலிருந்து 12 ஆம் தேதி வரை தொடர் தெருமுனை பகுத்தறிவு - ஜாதி ஒழிப்புப் பரப்புரை கூட்டங்களை சேலம் மாநகரப் (கிழக்கு) பகுதி பெரியார் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. அனைத்துக் கூட்டங்களிலும் சிற்பி ராசன் ‘மந்திரமா, தந்திரமா’ நிகழ்ச்சி நடத்துகிறார். தலைமைக் கழகப் பேச்சாளர்கள் சூலூர் வீரமணி, கோகுல கண்ணன், கண்ணன், பொள்ளாச்சி நாகராசு, பெரியார் நேசன், கலைவாணி ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.

## படத் திறப்பு

*13.12.2009 ஞாயிறு காலை 10 மணிக்கு கோவை பெரியார் படிப்பகத்தில் மறைந்த மாவட்டக் கழகத் தலைவர் ஆழியார் நாச்சிமுத்து, பெரியாரியல் சிந்தனையாளர் வெற்றிவேந்தன், இருகூர் நகர கழகத் தலைவர் சிவராஜ் ஆகியோர் படம் திறக்கப்பட்டது. கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் திறந்து வைத்தார். இந் நிகழ்வில் நாமக்கல் தனபால், வெ. ஆறுச்சாமி, பேராசிரியர் திருநாவுக்கரசு, பொள்ளாச்சி நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.*



# பயிற்சி முகாம் காட்சிகள்





















## வகுப்புகளை உற்சாகப்படுத்திய கேள்வி-பதில்

மூன்று நாட்களும் நடந்த வகுப்புகளின் இறுதியில் கலந்து கொண்ட தோழர்களுக்கு கேள்வி பதில் போட்டி நடைபெற்றது. ஒவ்வொரு வகுப்பின் இறுதியிலும் பங்கேற்பாளர்களுக்கு அய்ந்து கேள்விகள் கேட்கப்பட்டன. சரியான பதிலைச் சொன்ன தோழர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. சரியான பதிலைச் சொல்லி பரிசைப் பெற வேண்டும் என்கிற நோக்கில் தோழர்கள் ஒவ்வொருவரும் வகுப்புகளை கூர்ந்து கவனித்து, குறிப்புகள் எழுதிக்கொண்டு உற்சாகமாக ஆவலில் போட்டி போட்டுக் கொண்டு கேள்விக்கான பதிலைச் சொன்ன விதம், கலந்து கொண்ட அனைவரும் விழிப்புடன் இருந்ததைக் காட்டியது. முகாமில் ஒவ்வொரு வகுப்பும் உற்சாகமாக சென்றதற்கான ஊட்டச் சத்தாக கேள்வி பதில் என்கிற முறை அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### மூடநம்பிக்கை பட்டியலிடும் போட்டி

முகாமின் இரண்டாம் நாள் இரவு 9.30 மணிக்கு பங்கேற்பாளர் நேரத்தில் தோழர்களுக்கு வித்தியாசமான போட்டி அறிவிக்கப்பட்டது. இந்த சமூகத்தில் நிலவும் மூடநம்பிக்கைகளை பட்டியலிட்டு எழுதித் தரவேண்டும். அதில் அதிக மூடநம்பிக்கைகளை பட்டியலிட்டு எழுதி இருக்கும் தோழர்களுக்கு பரிசு வழங்கப்படும். இதுதான் போட்டியின் முறை. தோழர்கள் ஆர்வத்தோடு மூடநம்பிக்கைகளை பட்டியலிடத் தொடங்கினர். 40 தோழர்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் மூடநம்பிக்கைகள் பட்டியலிடப்பட்டன. அதில் அதிக அளவு 123 மூடநம்பிக்கைகளை எழுதி, கோவை ந. பன்னீர்செல்வம் முதற்பரிசு பெற்றார். அடுத்ததாக 109 மூடநம்பிக்கைகளை பட்டியலிட்டு திருப்பூர் ராயபுரம் க. முரளிதரன் இரண்டாம் பரிசு பெற்றார். 106 மூடநம்பிக்கைகளை பட்டியலிட்டு ஆனைமலை மு. பூங்குழலி மூன்றாம் பரிசு பெற்றார். மூவருக்குமான பரிசை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழங்கினார். மூடநம்பிக்கைகளை பட்டியலிடும் போட்டி, தோழர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டியதுடன், சமூகம் பற்றி தோழர்கள் சிந்தித்து, அது குறித்து தெளிவடைந்து, தங்களது கருத்தை வெளிப்படுத்தும் தூண்டுகோலாக அமைந்தது.

### குழு விளையாட்டு

ஒரே அரங்கத்தில் காலை முதல் மாலை வரை அமர்ந்து பெரியாரியலை உரையாக கேட்டுக் கொண்டிருந்த தோழர்களுக்கு, ஓய்வையும் உற்சாகத்தையும் வழங்குகின்ற வகையில் இந்த பயிற்சி முகாமில் இரண்டு நிகழ்ச்சிகள் அறிமுகம் செய்யப்பட்டது. ஒன்று - கேள்வி பதில் நிகழ்ச்சி. அடுத்தது குழு விளையாட்டு. பயிற்சி முகாம் நடந்த திருமண மண்டபம் திருமூர்த்தி அணையின் படகுத் துறைக்கு எதிரில் அமைந்திருந்தது. படகுத் துறையை ஒட்டிய கடற்கரை போன்ற நீண்ட புல் தரையில் முகாமில் பங்கேற்ற தோழர்கள் இரு குழுவாக பிரிக்கப்பட்டு, விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. துண்டு எடுத்தல், குச்சி விளையாட்டு என்ற இரண்டு வகைப் போட்டிகள் முதல் நாள் மாலையும், இரண்டாம் நாள் மாலையும் நடத்தப்பட்டது.

மலையும், மரங்களும் சூழ்ந்த ஒரு பகுதியும் அணையில் நீர் சூழ்ந்த மறு பகுதியுமான ரம்மியமான இடத்தில் மாலை நேரத்தில் நடந்த விளையாட்டு தோழர்களுக்கு புத்துணர்ச்சியைத் தந்தது. அங்கு கூடியிருந்த சுற்றுலா பயணிகளும் அய்யப்ப பக்தர்களும் கைதட்டி உற்சாகப்படுத்தியதும் தோழர்களை மகிழ்ச்சியடைய வைத்தது.

### மாணவர்களும் பெண்களும்

மூன்று நாட்களும் முகாமிலேயே தங்கி இருந்து பயிற்சியில் கலந்து கொண்ட 150 தோழர்களில் 35 பள்ளி கல்லூரி மாணவர்களும், 14 பெண்களும் கலந்து கொண்டனர். பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவர்களும் பெண்களும் சேர்ந்து பயிற்சி முகாமில் கலந்து கொண்டவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் என்பது இம்முகாமின் சிறப்பு அம்சமாகும்.

### பங்கேற்பாளர்கள் பின்னணி

இரண்டு நாட்கள் 150 பேரும் மூன்றாம் நாள் 200 பேரும் கலந்து கொண்ட முகாமில் முக்கியமாக கலந்து கொண்ட தோழர்களின் கழகத் தொடர்பு - கழகத்தில் ஈடுபாடு - பெரியாரியலில் பயிற்சி - கலை, இலக்கிய ஈடுபாடு, எழுத்துத் துறையில் ஆர்வம் - மற்ற துறைகளில் பயிற்சி - வாசிப்பு அனுபவம், ஆர்வம் என பங்கேற்று கலந்து கொண்ட தோழர்களைப் பற்றிய அனைத்து விவரங்களும் விண்ணப்பத்தின் மூலம் சேகரிக்கப்பட்டது. அந்தந்த தோழர்களின் பங்களிப்பை பயன்படுத்திக் கொள்ளவும், அவர்களின் திறமையை பலப்படுத்தவும் வாய்ப்பாக விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

– நமது செய்தியாளர்

– புரட்சிப் பெரியார் முழக்கம் 07.01.2010

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# மனிதனின் பேச்சு வந்த பிறகே கடவுள் வந்தது

- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும், மனித இன ஆராய்ச்சியாளர்களும், ஆதி மனிதன் பாலூட்டியாக இருந்தான் என்கிறார்கள். அதாவது குட்டி போட்டு பால் கொடுக்கும் ஒரு விலங்காகவே இருந்திருக்கிறார்கள். அதன் பின் தான் ஐந்து கைவிரல்களும் ஐந்து கால் விரல்களும் கொண்ட குரங்கினத்தைப் போலவும் மனிதக் குரங்கினத்தைப் போலவும் மாறியுள்ளான். **இதை தான் ‘பிரைமேட்’ இனம் என்கிறார்கள்.**
- இதற்கு பின் ஏற்பட்ட வளர்ச்சி என்னவென்றால், விலங்குகளுக்குள்ளே மூளையையும், நரம்பு மண்டலத்தையும் திறமையுடன் இயக்கும் ஆற்றல் பெற்றான். காலாலும், கைகளாலும் நடந்து கொண்டிருந்தவன், இரு கால்களால் தட்டுத் தடுமாறி நடக்கும் மனிதச் சாயலை பெற்றான். **இதை ‘ஹோமினிடே’ இனம் என்று அழைக்கிறார்கள்.**
- இதற்கு அடுத்த நிலை மனித பரிணாம வளர்ச்சியின் முக்கிய நிலையாகும். தன் மொத்த உருவத்தில் குரங்குகளையும், மனிதக் குரங்கையும் விஞ்சி அதிக மூளை வளர்ச்சியும் திறமையும் உள்ள ‘ஹோமோ எரக்டஸ்’ எனப்படும் நிமிர்ந்த நிற்கும் இன மனிதன் ஆனான். இது அவனுடைய பரிணாம வளர்ச்சியின் முக்கிய திருப்பமாகும். நெடுங்காலத்துக்குப் பின் **‘ஹோமோசேப்பியன்’** எனப்படும் மனித இனத்தவன் ஆனான்.

முழு மூளை வளர்ச்சியும் உருண்டையான வளைந்த மண்டை ஓடும், நேரான நெற்றியும் உடையவனாக மாறினான். இந்த மனிதனையே வரலாற்று காலத்துக்கு முந்தைய மனிதன் என்கிறோம். இவன் விட்டுச் சென்ற பொருட்களும், அடையாளங்களும் உலகின் பல்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மிகப் பழங்கால மனிதனின் சுவடுகள் ஆசியாவிலேயே காணப்பட்டன. 1891 இல் ஜாவா மனிதனின் மண்டை ஓடு, டாக்டர் யூஜின் டுபாய்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இவன் மனிதக் குரங்கு மனிதனாவான். இவனது காலம் சுமார் 5 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தியது.

1929 இல் டாக்டர் டேவிட்ஸன் பிளாக் என்பவர் சீனாவில் உள்ள பீஜிங் நகரில் ஒரு மண்டை ஓட்டை கண்டுபிடித்தார். இது 2.5 லட்சம் ஆண்டுக்கு முந்தியது.

ஐரோப்பாவில் ஹெய்டல்பர்க் என்ற இடத்தில் 2 லட்சம் ஆண்டுகளுக்கு முந்திய மனிதனது மண்டை ஓட்டை கண்டுபிடித்தனர். ஜெர்மனியில் நியண்டர்தால் என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதனை நியண்டர்தால் மனிதன் என்கிறார்கள். இவனும் 2 லட்சம் ஆண்டுகள் முந்தியவன்தான். இவனுடம் முழுமையான மனிதன் அல்ல. அரை மனிதன். இவன் நெருப்பை அறிந்திருந்தான். குகையில் வாழ்ந்தான். தோலாடையை உடுத்தினான். வலக்கையை பயன்படுத்தினான். வேட்டையாட மரத்தையும் கடினமான கற்களையும் பயன்படுத்தினான். ஆற்றின் அருகே வசித்தான். அவனுக்கு பானையோ, பாத்திரமோ செய்யத் தெரியாது. இவனது தாடை எலும்பின் அமைப்பை வைத்துப் பார்க்கும் போது இவன் பேசத் தெரியாதவன் என்று தெரிகிறது.

இதற்குப் பின் கொஞ்சம் கொஞ்சமாக மனிதன் அறிவில் சிறந்து இன்றைய நிலையை அடைய லட்சக்கணக்கான வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.

மனிதன் பேசத் தெரிந்த பிறகுதான் கடவுளையும் மதத்தையும் உருவாக்கிக் கொண்டான்.

## சிற்பி. இராசன் பிறந்த நாள் நன்கொடை

மூடநம்பிக்கையைத் தோலுரித்து, மக்களிடம் பகுத்தறிவை விதைக்கும் ஒரே லட்சியத்தோடு தொண்டாற்றி வரும் கழகத் தோழர், பரப்புரையாளர் சிற்பி. இராசன் அவர்களுக்கு டிசம்பர் 25 ஆம் நாள் 55வது பிறந்த நாளாகும். தனது பிறந்த நாள் மகிழ்வாக, கழக ஏட்டுக்கு ரூ.5000 நன்கொடை வழங்கியுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

## கருத்துரிமை பறிப்பா? சேலம் கழகம் போர்க்கொடி

சேலத்தில் 14.11.09 அன்று இந்து முன்னணியின் கலந்துரையாடல் கூட்டம் நடைபெறுவதையொட்டி வைக்கப்பட்டிருந்த தட்டிகளில், “பகுத்தறிவு பேசும் தலைவர்கள் இந்து மதத்தை மட்டும் விமர்சிப்பது ஏன்? எது வரை?” என்ற கேள்வி கேட்கப்பட்டிருந்தது.

இந்த கேள்விக்கு பதில் அளித்தும், இந்து முன்னணிக்கு கேள்விகள் கேட்டும், துண்டறிக்கை கழகத்தினரால் விநியோகம் செய்யப்பட்டது. சேலம் பள்ளப்பட்டி காவல்துறையினர் இதைத் தடுத்தனர். கருத்துரிமையை பறிக்க உங்களுக்கு அதிகாரம் கிடையாது என்று வாதிட்ட தோழர்களுக்கு பதில் சொல்ல முடியாமல் உதவி ஆணையரிடம் அழைத்துச் சென்றனர்.

உதவி ஆணையர் அசோக்குமாரும், துண்டறிக்கை விநியோகிக்கக் கூடாது என்றார். “சட்டப்படி ஏதேனும் தவறு இருந்தால் எங்களை கைது செய்யுங்கள் அல்லது என்ன தவறு என்று கூறுங்கள்” என்று தோழர்கள் வாதிட்டனர். ‘இந்து முன்னணி’ என்ற பெயரை பயன்படுத்தியது தவறு என்று கூறினார் உதவி ஆணையர். எழுத்துப்பூர்வமாக வழங்குங்கள் என்று தோழர்கள் கேட்டனர். அப்படியே தருவதாக கூறிவிட்டு, தாமதப்படுத்திக் கொண்டே இருந்தனர். கைப்பற்றிய துண்டறிக்கைகளை தரவும் மறுத்தனர்.

எனவே தோழர்கள் மீண்டும் உடனடியாக ஆயிரம் துண்டறிக்கைகள் அச்சடித்து வழங்கினர். காவல்துறையிடம் வாதிட்டு கைப்பற்றிய துண்டறிக்கைகளையும் பெற்று மக்களிடம் வழங்கினர். தோழர்கள் விசு, கோகுல கண்ணன், பவளத்தானூர் மாரியப்பன், நங்கவள்ளி கிருஷ்ணன், வனவாசி செந்தில், முருங்கப்பட்டி ரமேஷ், மணிமாறன், அன்னதான பட்டி ராஜசேகர், புவனேஸ்வரன், குகை ராஜசேகரன், பழனி, சிவசக்தி நகர் வெங்கடேஷ், மாணவர் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**விரல் ரேகை பதிவுச் சட்டம்: சில வரலாற்றுத் தகவல்கள்
– 2ஆம் பகுதி அடுத்த இதழில்**

# சென்னையில் கழகத்தின் தமிழர் திருநாள் விழா

கழகத்தின் கோட்டையான சென்னை திருவல்லிக்கேணிப் பகுதியில் கழகத் தோழர்கள் முன்னின்று தமிழர் திருநாள் பொங்கல் விழாவை கடந்த பல ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள். எதிர்வரும் ஜன.12 ஆம் தேதி தோழர் பத்ரிநாராயணன் நினைவு நூலகம் அமைந்துள்ள பகுதியான வி.எம்.சாலையில் தமிழர் திருநாள் நிகழ்ச்சிகள் மாலை 5.30 மணிக்கு காஞ்சி மக்கள் மன்றத்தின் பறை முழக்க நிகழ்ச்சியோடு தொடங்குகிறது. பகுதி வாழ் இளைஞர்கள், குழந்தைகள் பங்கேற்கும் மாறுவேடப் போட்டி, நடனப் போட்டிகள் நடக்கின்றன.

இரவு 8.30 மணிக்கு மக்கள் தொலைக்காட்சிப் புகழ் புதுக்கோட்டை பூபாலன் கலைக்குழு வழங்கும் புதிய நையாண்டி நிகழ்ச்சியும், தொடர்ந்து இரவு 10 மணிக்கு திரைப்பட நாட்டுப்புற பாடகி சின்னபொண்ணு வழங்கும் இன்னிசை நிகழ்ச்சியும் நிகழ்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர். நல்லக்கண்ணு போட்டியில் வெற்றிப் பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்குகிறார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சரசுவதி, ‘பேராண்மை’ திரைப்பட இயக்குனர் எஸ்.பி. ஜனநாதன், வேளச்சேரி மணிமாறன் (ம.தி.மு.க. மாவட்ட செயலாளர்), விடுதலைச் செழியன் (விடுதலை சிறுத்தைகள்), சமூக காவலர் ஏஞ்சல் கிளாடீ வாழ்த்துரை வழங்குகிறாாகள்.

விழா நிகழ்ச்சிக்காக கழக தோழர்கள் தீவிரப் பணியாற்றி வருகிறார்கள்.

## பயிற்சி முகாமில் நூல் அன்பளிப்பு

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் ஆகியோருக்கு, திருமூர்த்தி மலை பயிற்சி முகாமில் - “கடவுள் ஒரு பொய் கற்பனை” என்ற நூலை அன்பளிப்பாக சூலூர் கழகத் தோழர் சரவணன் வழங்கினார்.

பயிற்சி முகாமில், பயிற்சியைத் தொடர்ந்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க முன்வந்த சுமார் 40 தோழர்களுக்கும் தோழர் சிற்பி ராசன் அவர் எழுதிய பகுத்தறிவு நூலை அன்பளிப்பாக வழங்கினார்.

## மீனவர் வாழ்வுரிமை பறிப்பு சட்டத்தை எதிர்த்து கருத்தரங்கு

மீனவர்களின் வாழ்வுரையைப் பறிக்கும் கடல்சார் மேலாண்மை ஒழுங்குமுறைச் சட்டம் 2009-ன் அநீதிகளைக் கண்டித்து சென்னை அடுத்த திருவொற்றியூரில் புரட்சிகர தொழிலாளர் முன்னணி அமைப்பினரால் 27.12.2009 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி அளவில் கருத்தரங்கம் நடைபெற்றது.

சென்னை திருவொற்றியூரில் கடல் சார் மேலாண்மை ஒழுங்குமுறைச் சட்டம் 2009-ஐ கண்டித்து நடைபெற்ற கருத்தரங்கில்தென்கனல் (புரட்சிகர தொழிலாளர் முன்னணி) தலைமை வகித்தார். கடலார் (பத்திரிகையாளர்), புரட்சிகர தொழிலாளர் முன்னணி - தாமரை, தமிழ்மாறன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். இக்கருத்தரங்கத்திற்கு மாவீரன் முத்துக்குமரன் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

இக்கருத்தரங்கத்தில் பல்வேறு குப்பங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்று கண்டன உரை நிகழ்த்தினர்.


## பழ. நெடுமாறன் சகோதரர் கோமதி நாயகம் முடிவெய்தினார்

பிரபல நீர்ப்பாசனத் துறை பொறியியல் நிபுணரும், தமிழக ஆற்றுநீர்ப்பாசனம் தொடர்பான விரிவான ஆராய்ச்சியாளரும், தமிழர் பாசன வரலாறு என்ற ஆய்வு நூலையாக்கியவரும், பழ. நெடுமாறன் அவர்களின் இளவலுமான பழ. கோமதி நாயகம் அவர்கள் 29.12.09 அன்று முடிவெய்தினார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம். கழக சார்பில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் இறுதி மரியாதை செலுத்தினார். பழ. நெடுமாறன் அவர்களுக்கும், குடும்பத் தாருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 8th January 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 ஜனவரி 14, 2010 புரட்சி 9 முழக்கம் 1 விலை: ரூ.2.50


## ஓய்வு பெற்றவர்களுக்கு – மீண்டும் வேலையாம்

# தமிழக அரசின் விபரீத ஆணை

*தமிழக அரசு 18.12.2009 அன்று பிறப்பித்துள்ள ஒரு ஆணையின்படி, ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களை, அரசின் நிர்வாக பதவிகளிலும், தொழில்நுட்பப் பதவிகளிலும் மீண்டும் நியமிக்கலாம் என்று கூறுகிறது. இது கண்டனத்துக்குரிய ஆணை என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை.*

2004 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி, தமிழக அரசின் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு, நேர்முகத் தேர்வுக்காகக் காத்திருப்போரின் எண்ணிக்கை 49 லட்சத்து 85 ஆயிரத்து 289 பேர். வேலை வாய்ப்புக்காக வாழ்க்கைக் கதவைத் திறந்து வைத்துக் காத்திருக்கும், இந்த இளைஞர்களுக்கு வழி விடாமல், பணி ஓய்வு பெற்றவர்களையே மீண்டும் நியமிப்பது - சமூக நீதிக்கு எதிரானது ஆகும்.

தமிழ்நாட்டில் இப்போது 2 லட்சத்து 80 ஆயிரம் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. தமிழ்நாடு அரசு தேர்வாணையத்திலேயே, பணியிடங்கள் காலியாக இருந்த நிலையில், ஓய்வு பெற்ற 170 பேருக்கு தொகுப்பூதியம் வழங்கி, மீண்டும் அவர்களை பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். ஒரு மாதத்தில் ஓய்வு பெற இருப்போருக்கும், அரசு பணி நீட்டிப்பு உத்தரவை வழங்கியுள்ளது. தமிழ் நாட்டில் அரசுத் துறைகளில் பணி நிரந்தரமின்றி தொகுப்பு ஊதியம் பெற்றுப் பணியாற்றுவோர் 4000 பேர் உள்ளனர். இவர்களிலிருந்துகூட அரசு, பணி நியமனம் செய்திருக்கலாமே! ஓய்வு பெற்றவர்களை மீண்டும் ஏன் நியமிக்க வேண்டும்?

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, ஓய்வு பெற்றவர்களுக்கு பணி அமர்த்தம் செய்யக்கூடிய நான்கு அரசாணைகளை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். 2007 ஆம் ஆண்டு அக். 25 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட அரசாணை (எண்177) 12618 கிராம பஞ்சாயத்துகளிலும் நூலகம் அமைக்க இருப்பதாகவும், நூலகர்களாக ஓய்வு பெற்றவர்கள் மாதச் சம்பளம் ரூ.750-க்கு நியமிக்கப்படுவார்கள் என்றும் அந்த ஆணை கூறியது.

ஜூன் 2008 இல் கல்வித்துறை ஒரு ஆணையை வெளியிட்டது. (ஆணை எண்.274) அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள விரிவுரையாளர் பதவிக்கு, ஓய்வு பெற்ற அரசு கல்லூரி ஆசிரியர்களைக் கொண்டு தற்காலிகப் பணியமர்த்தம் செய்யப்படுவார்கள் என்று அந்த ஆணை கூறியது.

2009 மே 18 ஆம் தேதி தமிழ்நாடு தேர்வாணையத்தில் காலியாக உள்ள இடங்களுக்கு ஓய்வு பெற்ற ஊழியர்களை பணியமர்த்தலாம் என்று கூறியது. இறுதியாக கடந்த ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஆணை - அனைத்துத் துறைகளுக்கும் ஓய்வு பெற்றோர் நியமனத்தை விரிவுபடுத்தி விட்டது.

தமிழ்நாட்டில் வேலையின்மையின் பாதிப்பை உணர்த்துவதற்கு ஒரு உதாரணம்; குரூப் 2 பிரிவு பணியிடங்களுக்கு வேலைக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு விண்ணப்பித்துள்ளோர் 10 லட்சம் இளைஞர்கள். 11000 ஸ்டேட் வங்கி பணியிடங்களுக்கு விண்ணப்பித்துள்ளவர்கள் 36 லட்சம் பேர். 2500 கிராம அதிகாரி பணியிடங்களுக்கு விண்ணப்பித்துள்ளோர் 9 லட்சம் பேர். தமிழ்நாட்டில் இளைஞர்களின் வேலை இல்லாத அவலத்தை விளக்குவதற்கு, இந்த புள்ளி விவரமே சான்றாகும்.

மண்டல்குழு பரிந்துரையை வி.பி. சிங் ஏற்று, பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீட்டுக்கான ஆணை பிறப்பித்தார். தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. ஓய்வு பெறும் வயதை 58 லிருந்து 60 ஆக உயர்த்தி, பிற்படுத்தப்பட்டோரின் புதிய நியமனங்களுக்கான வாய்ப்புக் கதவுகளை இழுத்து மூடியது. 69 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கும் புதிய தலைமுறைக்கு வழிவிடாமல், வேலை வாய்ப்பு அலுவலகங்களில் நிரம்பி வழியும் காத்திருப்போர் பட்டியலையே முடக்கிப் போடுவது, என்ன நியாயம்? இதை நாம் சுட்டிக் காட்டும்போது, அரசு ஊழியர்களுக்கு எதிரான கருத்தாக கருதுவதில் எந்த நியாயமும் இல்லை. அரசு ஊழியர்களுக்கு, அரசு தாராளமாக சலுகைகளை வழங்கட்டும். அது பற்றி நமக்கு கவலை இல்லை. அரசு ஊழியர்களின் வீட்டுப் பிள்ளைகள்கூட அரசின் இந்த ஆணையால் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசு ஊழியர்கள் மனம் திறந்து சிந்திக்க வேண்டும்.

### கி.வீரமணியின் துரோகம்

அரசின் இந்த விபரீத ஆணையை இடித்துக் காட்டாமல், இந்த ஆணையை வரவேற்று, எதிர்ப்போரைக் கண்டித்து, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை வெளியிட்டிருப்பது தான் வேடிக்கை. அரசு ஊழியர்கள் ஓய்வு வயதை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை வைத்த போது, அதைக் கடுமையாக எதிர்த்தது பெரியார் இயக்கம் என்பதுதான் வரலாறு. அன்றைக்கு இதை எதிர்த்து தி.க. இளைஞரணி சைக்கிள் பேரணிகளை நடத்தியது. ஓய்வு வயதை உயர்த்துவதும், ஓய்வு பெற்றவர்களை மீண்டும் பணியமர்த்தம் செய்வதும் ஒன்று தானே? ஆனால், வீரமணியோ, பெரியார் பெயரில் ஒரு கழகத்தை நடத்திக் கொண்டு, பெரியார் கொள்கையின் ஒரே வாரிசாக தன்னை அறிவித்துக் கொண்டு, பெரியார் கொள்கைகளுக்கே குழி பறிக்கிறார்.

“ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் பற்றி முறையாக கருத்து தெரிவிக்க வேண்டியவர்கள் அரசு ஊழியர்கள். அவர்களே வரவேற்றப் பின்னர், எதிர்க் கட்சிகள் இதைக்கூட அரசியலாக்குவதாக” கி.வீரமணி வாதிடுகிறார். இதில் முறைப்படி கருத்து கூற வேண்டியவர்கள் பாதிப்புக்குள்ளான - வேலை வாய்ப்புக்கு காத்திருக்கும் இளைஞர்களே தவிர, அரசு ஊழியர்கள் அல்ல. ஜெயலலிதா முதல்வராக இருந்த போது அரசு ஊழியர்கள் மீது அடக்குமுறை சட்டங்களை ஏவியபோது - ஜெயலலிதாவுக்கு, அப்போது புகழாரம் சூட்டி, அடக்குமுறைகளை ஆதரித்தவர், இதே வீரமணிதான் என்பதை நாடு மறந்து விடவில்லை.

வீரமணியின் கொள்கை துரோகத்துக்கு இது மற்றொரு சான்று!

தமிழக அரசின் இந்த ஆணை உடனே திரும்பப் பெற வேண்டும். அரசு ஊழியர்களை திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக - எதிர்காலத் தலைமுறையின் வாழ்க்கையை இருட்டடித்துவிடக் கூடாது.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 14.01.2010

## ஆளுநர் உரையில் வரவேற்கத்தக்க அறிவிப்புகள்

தமிழக அரசின் ஆளுநர் உரையில் பல்வேறு சமூகநலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் மிகவும் குறிப்பிட்டுக் கூற வேண்டியது - உயர்கல்வி தொடர்பான அறிவிப்பாகும்.

“அரசு மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும், பல் மருத்துவக் கல்லூரிகளிலும், வேளாண்மைக் கல்லூரிகளிலும், கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும், சட்டக் கல்லூரிகளிலும் ஒற்றைச் சாளர முறையில் சேர்க்கை பெறும் மாணவர்களில், அவர்கள் குடும்பத்தில் இதுவரை யாரும் பட்டதாரிகளே இல்லையானால், அந்த மாணவர்கள் தொழிற்கல்வி படிப்பதை ஊக்குவிப்பதற்காக, சாதிப்பாகுபாடின்றியும், வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலும், வரும் கல்வி ஆண்டு முதல் அவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்ளும்” என்ற அறிவிப்பு மிகவும் சிறப்பானது. வரவேற்கத்தக்கது. இதுவரை ஒரு பட்டதாரியைக்கூட உற்பத்தி செய்யாத குடும்பமே - சமூக கல்வி ரீதியான பின்தங்கியப் பிரிவுக்கு உரியவர்களாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

தலித் சமூகத்தில் மருத்துவம், பொறியியல் போன்று உயர்கல்வி பெறும் மாணவர்களுக்கான கல்விக் கட்டண செலவை அரசே ஏற்பது குறித்தும், தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும். தொலைக்காட்சி பெட்டிகளை இலவசமாக வழங்குவதைவிட இது ஆக்கபூர்வமான செயல்திட்டமாக இருக்கும்.

கிராமப் பஞ்சாயத்தில் கூரை வீடுகளே இல்லாத அளவுக்கு 21 லட்சம் குடிசைகளில் வசிக்கும் மக்களுக்கு 6 ஆண்டுகாலத்திற்குள்ளாக கான்கிரீட் வீடுகளை அரசே கட்டித் தரும் திட்டம் ஒன்றும், ஆளுநர் அறிவிப்பில் வெளி வந்துள்ளது. இது வரவேற்கப்பட வேண்டிய திட்டம். ஆனால், கிராமங்களில், குடிசை வீடுகள் அதிகமாக சேரிப் பகுதிகளிலேயே உள்ளன. அங்கேயே கான்கிரீட் வீடுகளைக் கட்டும்போது சேரிப் பகுதியும் உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே ஊருக்குள், மாற்று இடங்கள் உள்ள பகுதிகளில், இந்த மக்களுக்கான கான்கிரீட் வீடுகளைக் கட்டினால், சேரிகள் தொடரும் அவலத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்போர் பட்டா பெற காலவரம்பை 3 ஆண்டாகக் குறைக்கும் திட்டம் கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் திட்டமாகும்.

**தோழர்களுக்கு இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்!**

# விரல் ரேகை பதிவு சட்டம்: சில வரலாற்றுத் தகவல்கள் (2)

# ‘குற்றப் பரம்பரை’ச் சட்டங்களுக்கு எதிராக பெரியார் கொடுத்த குரல்!

முத்துராமலிங்கத் தேவரின் அரசியல் குரு சீனிவாச அய்யங்கார் என்னும் பார்ப்பான். மற்றொருவர் சத்தியமூர்த்தி அய்யர். கைரேகை சட்டம் மட்டுமல்லாது கடுமையான பல அடக்கு முறைச் சட்டங்களை பிரிட்டிஷ் அரசாங்கம் செயல்படுத்தியபோது அவற்றை எதிர்க்காமல் ஆங்கிலேயே அரசுக்கு ஆதரவாக இருந்தது காங்கிரஸ் கட்சி. பார்வர்டு பிளாக் தொடங்கும் வரை அந்தக் காங்கிரஸ் கட்சியின் தொண்டராகத்தான் தேவர் இருந்தார்.

1937 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி குற்றப்பரம்பரைச் சட்டம் உள்ளிட்ட அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் முற்றாக ஒழிப்போம் என வாக்குறுதி அளித்துப் பிரச்சாரத்தில் ஈடுபட்டது. குற்றப் பரம்பரைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களை மீட்டெடுத்து அவர்களுக்கு மறுவாழ்வையும் அவர்களது வாழ்வில் புரட்சிகர மாற்றங்களையும் உண்டாக்கிய நீதிக்கட்சியின் வேட்பாளராக இராமநாதபுரம் ராஜாவான சண்முக இராஜேசுவர சேதுபதி களத்தில் நின்றார். அவரை எதிர்த்து குற்றப் பரம்பரைச் சட்டத்திற்கு எதிராக அதுவரை ஒரு துரும்பைக்கூட அசைக்காத காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக முத்துராமலிங்கத் தேவர் நிறுத்தப்பட்டார். கைரேகைச் சட்டத்திற்கு எதிராக நீதிக்கட்சி உழைத்த உழைப்பை நினைவுகூர்ந்து நீதிக்கட்சிக்கு ஆதரவாக தேவர் செயல்பட்டிருந்தால் குற்றப் பழங்குடி சட்டத்தை எதிர்த்த போராளி என முழுமையாக அவரைப் பாராட்டியிருக்கலாம். அந்தத் தேர்தலில் பெரியார் நீதிக்கட்சிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தபோது,

....... முஸ்லீம் லீக்கும் பார்ப்பனரல்லாதார் இயக்கமுமாகியவை ஏற்பட்டு சிறிது ஞான ஒளியும், சுதந்திர உணர்ச்சியும், சுயமரியாதை லட்சியமும் ஏற்பட்ட பிறகு, அரசியலில் கல்வி விஷயத்திலேயே முதன்முதல் மாறுதல் ஏற்படலாயிற்று. அதாவது 1920 ஆம் வருடத்துக்கு முன்பு கல்விக்காக சென்னை மாகாணத்தில் வருடம் ஒன்றுக்கு (1,40,00,000) ஒரு கோடியே நாற்பது லட்சம் ரூபாய் மாத்திரம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. ஆனால், ஜஸ்டிஸ் கட்சியென்னும் பார்ப்பனரல்லாதார் மந்திரி பதவி அடைய நேர்ந்து கல்வி இலாக்காவில் ஆதிக்கம் பெற்ற பிறகு இன்று கல்வி இலாக்காவுக்கு வருடம் 1-க்கு (225,00,000) இரண்டு கோடியே இருபத்தி ஐந்து லட்ச ரூபாய் ஒதுக்கி வைத்து அதற்கேற்றாற்போல் பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் சர்வகலா சாலைகளையும் ஒன்றுக்கு இரண்டாக மூன்றாக அதிகப்படுத்தி ‘சண்டாளர்’கள், ‘மிலேச்சர்’கள், ‘சூத்திரர்’கள் ஆகிய மக்கள் யாவரும் இலவசமாகவும் கட்டாயமாகவும் படிக்க வேண்டும் என்கின்ற திட்டம் ஏற்படுத்தி அமுலுக்கும் கொண்டு வந்துவிட்டுவிட்டார்கள்.

இதன் பயனாகவே ஒவ்வொரு வகுப்புக்கும் அதாவது ஈன ஜாதி, சண்டாள ஜாதி, பரம்பரை விவசார ஜாதி, பரம்பரை திருட்டு ஜாதி என்று சொல்லக்கூடிய மக்களுக்கெல்லாம் சுதந்திர உணர்ச்சியும், சுயமரியாதை லட்சியமும் ஏற்பட்டு, அநேக வகுப்பு சங்கங்களும் ஏற்பட்டு முற்போக்குக்கு உழைக்க முன் வரலாயின.

இந்தத் தேர்தலில் முத்துராமலிங்கத் தேவருக்கு எதிராக அவரது தந்தையார் உக்கிரபாண்டித் தேவரே நேரடியாக பெரியாருக்கும் நீதிக்கட்சிக்கும் ஆதரவாகப் பிரச்சாரம் செய்தார். ஆனால் தேர்தலில் காங்கிரசே வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. இராஜாஜி பார்ப்பனர் முதல்வரானார். அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் ஒழிப்பேன் என்று சூளுரைத்தவர்கள் அந்த அடக்குமுறைச் சட்டங்களை முன்பைவிட மிகக் கடுமையாக மக்களிடம் செயல்படுத்தத் தொடங்கினர். தேவர் வேடிக்கை பார்த்தார்.

சட்டசபையில் ஒருமுறை திருமங்கலம், செக்கானூரணி பகுதிகளில் இன்னும் குற்றப் பரம்பரைச் சட்டம் நடைமுறையில் உள்ளது என தேவர் பேசியபோது, இராஜாஜி, செக்கானூரணி பகுதியில் இருந்து யாரும் கோரிக்கை வைக்கவில்லை எனத் திமிராகப் பேசினார். பதிலுக்கு தேவர் எதுவும் பேசவில்லை. அந்தக் காலத்தில் பெரியார் குற்றப் பரம்பரை உள்ளிட்ட அடக்குமுறைச் சட்டங்களை எதிர்த்துக் குரல் கொடுக்கிறார்.

...... தேர்தல் காலத்திலே அடக்குமுறைச் சட்டங்களை ஒழிப்பதை ஒரு முக்கிய பிரச்சினையாக மதித்துக் காங்கிரஸ்காரர் பதவியேற்றால் அடக்குமுறைச் சட்டங்களை ஒழிப்பதாகவும் வாக்குறுதியளித்து, பாமர மக்களின் வோட்டுக்களைப் பறித்தனர். காங்கிரஸ்காரர் செய்த விஷமப் பிரச்சாரத்தின் பயனாகவும், காங்கிரஸ்காரர் பதவிக்கு வந்தால் மண்ணுலகமே பொன்னுலக மாகிவிடுமென பாமர மக்கள் முட்டாள்தனமாக நம்பியதின் பயனாகவும் இப்பொழுது 7 மாகாணங்களிலே காங்கிரஸ் மந்திரிசபைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், எல்லைப்புற மாகாணத்தைத் தவிர வேறு எந்த காங்கிரஸ் மாகாணத்திலும் அடக்குமுறைச் சட்டங்களை ஒழிக்க முயற்சி செய்யப்படவே இல்லை. மாறாக காங்கிரஸ்காரரால் வெறுக்கப்பட்ட சி.ஐ.டி.களும், 144 தடையுத்தரவுகளும் இன்றியமையாத தேவை யென்றும் அவைகளின் உதவியின்றி எந்தச் சர்க்காரும் இயங்க முடியாதென்றும் காங்கிரஸ் மந்திரிகளே பகிரங்கமாகக் கூற முன்வந்து விட்டார்கள். காங்கிரஸ் மந்திரிகள் கட்ளைப்படி ராஜத்துரோக குற்றஞ்சாட்டி வழக்குகள் தொடரப்பட்டு, தண்டனைகளும் வழங்கப்படுகின்றன. சென்னை மாகாணத்திலே இந்தி எதிர்ப்பாளர் மீது அடக்குமுறைச் சட்டங்கள் பிரயோகம் செய்யப்பட்டு 3 முதல் 6 மாதங்கள் வரை கடுங்காவல் தண்டனைகளும் வழங்கப்படுகின்றன.

**காவல் நிலையங்களிலும், சமூக பஞ்சாயத்துக்களிலும் சில குறிப்பிட்ட சமூகத்தினர், அன்றாடம் கைவிரல் ரேகையைப் பதிய வேண்டும் என்ற ஒரு மனித விரோத சட்டம் பிரிட்டிஷ் ஆட்சியில் அமுலில் இருந்தது. இந்த சட்டத்தை நீக்கும் போராட்டங்கள் நடந்தன. இந்த சட்டத்தை எதிர்த்து நடந்த போராட்டங்கள் பற்றிய வரலாற்றுத் தகவல்களை முன்வைத்து தோழர் பெரியார் டாட்காம் இணையதளத்தில் அதி.அசுரன் வெளியிட்ட கட்டுரை இது.**

காங்கிரஸ்காரர் மெய்யாகவே நாணயமுடையவர்களானால் - யோக்கியப் பொறுப்புடையவர்களானால் - நேர்மையுடையவர்களானால் - அடக்குமுறைச் சட்டங்களை இதற்குள் ஒழித்திருக்க வேண்டாமா?

அடக்குமுறைச் சட்டங்களை ஒழிப்பதை தமது வேலைத் திட்டத்தில் ஒரு முக்கிய அம்சமாகக் கொண்டிருக்கும் காங்கிரஸ்காரர் நடத்தும் ஆட்சியிலே அந்தச் சட்டத்தை ஒழிக்கும் ஒரு மசோதாவை அக்கட்சியைச் சேராத ஒருவர் கொண்டுவரச் சந்தர்ப்பமளித்த காங்கிரஸ்காரர் யோக்கியதையை நாட்டு மக்கள் அறிய ஒரு தருணம் வாய்த்தது நமக்குப் பெரும் மகிழ்ச்சியளிக்கிறது. தோழர் கிருஷ்ணமாச்சாரியார் முயற்சி காங்கிரஸ் மந்திரிகளுக்கு ஒரு சவுக்கடியென்றே சொல்ல வேண்டும். இந்த மசோதா விஷயத்தில் காங்கிரஸ் சர்க்கார் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று பார்ப்போம்.

*குடிஅரசு - 24.07.1938*

இந்தக் காலத்தில் கிரிமினல் திருத்தச் சட்டம் என்று ஒரு புதிய ஒடுக்குமுறைச் சட்டத்தையும் இராஜாஜி அரசு பயன்படுத்தத் தொடங்கியது. நீதிக்கட்சி அரசுகளால் தோற்றுவிக்கப்பட்ட 2000 பள்ளிகளை 1938 இல் இராஜாஜி தனது ஆட்சியில் இழுத்து மூடினார். 125 பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். மூடப்பட்ட பள்ளிகளில் படித்த ஆயிரக்கணக்கான கள்ளர், தேவர் சாதியைச் சார்ந்த மாணவர்களும் தமது எதிர்காலத்தை இழந்தனர். இக்கொடுமையை எதிர்த்து நாடெங்கும் கிளர்ச்சிகள் வெடித்தன. அதனை அடக்க பிரிட்டிஷ் அரசின் கிரிமினல் திருத்தச் சட்டத்தை ஏவினார் இராஜாஜி. இதில் நூற்றுக்கணக்கான கள்ளர்கள் தேவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் சிறைப்படுத்தப்பட்டனர். அமைதியாக அனைத்தையும் வேடிக்கை பார்த்தார் தேவர். பெரியாரும் இக்கொடிய சட்டத்தில் 3 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை பெற்றார். அப்போது குடிஅரசில் பெரியார்தான் அடக்குமுறைச் சட்டங்களை எதிர்த்து எழுதினார்.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காக வேண்டி, நமது சுயராஜ்ஜிய சர்க்கார் இதுவரை 120 பேர்களை அரஸ்ட் (கைது) செய்து சுமார் 40 பேர்கள் வரை கிரிமினல் அமெண்ட்மென்ட் ஆகட் 7-1எ படி 4-மாதம், 6-மாதம் கடின காவல் சிட்சை கொடுத்துத் தண்டித்து கேப்பைக் கூழும், களியும் போட்டு மொட்டை அடித்து ஜெயில் உடை கொடுத்து குல்லாய் போட்டு வேலை வாங்கி வருகிறார்கள்.

மற்றும் தோழர்கள் சி.டி.நாயகம் (மாஜி டிப்டி ரிஜிஸ்ட்ரார்), ஈழத்து சிவானந்த அடிகள் பி.ஏ. (ஒரு சந்யாசி), கே.எம்.பாலசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்., ஷண்முக நந்த சுவாமி (ஒரு சந்யாசி), சி.என். அண்ணாதுரை, எம்.ஏ., (ரிவோல்ட் பத்திராதிபர்), சுவாமி அருணகிரி நாதர் (ஒரு மடாதிபதி) முதலாகிய முக்கியஸ்தர்களை 3 வருஷம் வரை தண்டிக்கும் படியான இண்டியன் பினல் கோட் சட்டம் 117 பிரிவுப்படி கைது செய்து சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். சிலர் ஜாமீனில் இருக்கிறார்கள் என்றாலும் இனியும் இந்த இரண்டு சட்டப்படியும் தினமும் 3 பேர், 4 பேர் வீதம் கைது செய்யப்பட்டுக் கொண்டும் தினமும் 10 பேர், 15 பேர் வீதம் தண்டிக்கப்பட்டுக் கொண்டும் வருகிறார்கள். இந்த சுயராஜ்ய சர்க்கார் இந்தக் காரியங்கள் மாத்திரம்தான் செய்து வருகிறார்கள். இதற்கு மேல் என்ன செய்து விடுவார்கள்? என்று மக்கள் கருதி மேலும் மேலும் கைதியாக ஆயிரக்கணக்கான பேர்கள் முன்வந்து விடுவார்கள் போலிருக்கிறதே என்று கருதி, நமது தோழர் சத்தியமூர்த்தியார் அவர்கள் தமது அருப்புக்கோட்டை அரசியல் மகாநாடு தலைமைப் பிரசங்கத்தில், இந்தியை எதிர்த்து கிளர்ச்சி செய்பவர்கள் பெரிய ராஜத் துரோகிகளாவார்கள் என்றும் அவர்கள் மீது ஆயுள் பரியந்தம் அல்லது தூக்குப் போடும்படியான குற்றப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மிக தயாள குணத்தோடு, இளகிய மனம் கொண்டு பேசியிருக்கிறார். இதை மெயில் பத்திரிகை மாத்திரமே கண்டித்து தலையங்கம் எழுதி இருக்கிறது.

.... மகாத்மா அறிக்கையில் ஒரு குழப்பமும் இருக்கிறது. ராஜாஜி கிரிமினல் திருத்தச் சட்டத்தை உபயோகிக்காமல் போயிருந்தால் அது பெரும் முட்டாள்தனமாயிருந்திருக்கும் என்று ஒரு விடத்தில் காந்திஜி கூறுகிறார்.

.... நாம் வெறுத்த - நாம் ரத்துச் செய்தே தீருவோமென்று கூறி வந்த கொடிய அடக்குமுறைச் சட்டத்தைத்தானா நாம் கையாள வேண்டு மென்பது தான் என் கேள்வி. அச்சட்டத்தை காங்கிரஸ் மந்திரிகள் கையிலெடுத்தது பாவமில்லையென்று மகாத்மாஜியே கூறினாலும் அது குற்றங்குற்றமே யென்று தான் நான் கூறுவேன். இதற்காக சிலர் எனக்கு ‘தேசத்துரோகி’ப் பட்டஞ் சூட்டினாலும் அதையும் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

*- குடிஅரசு 02.10.1938*

1937 ஆம் ஆண்டு தேர்தலில் முத்துராமலிங்கத் தேவர் எடுத்த தவறான நிலைப்பாட்டினால் குற்றப் பரம்பரைச் சட்டத்தை மேலும் 10 ஆண்டுகளுக்கு நீட்டித்தது. 1934 அபிராமம் மாநாட்டுக்குப் பிறகு - அந்த மாநாட்டுக் கோரிக்கையை அப்போதைய பெரியாரின் ஆதரவு பெற்ற நீதிக்கட்சி அரசு செயல்படுத்திய பிறகு கைரேகைச் சட்டம் நீக்கப்பட்ட 1947 ஜூன் 5 வரை தேவர் கைரேகைச் சட்டத்தை எதிர்த்து எந்தப் போராட்டமும் செய்யவில்லை என்பதோடு, கூடவே இன்னும்

(3 ஆம் பக்கம்)

# சாதி ஒழிப்பில் - முத்துராமலிங்க தேவரின் பங்களிப்பு என்ன?

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையான அடக்குமுறைச் சட்டங்கள் வந்த போதும் அமைதியாகவே இருந்தார். 1937 தேர்தலில் வாக்குறுதி அளித்தபடி குற்றப்பரம்பரைச் சட்டம் உள்ளிட்ட அடக்குமுறைச் சட்டங்களை ஏன் நீக்கவில்லை என காங்கிரசையோ இராஜாஜியையோ எதிர்த்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக 1939 வரை காங்கிரசிலிருந்து நேதாஜி வெளியேற்றப்படும் வரை காங்கிரசிலேயே இருந்துவிட்டு தனது அரசியல் ஆசான் சீனிவாச அய்யங்கார் அறிவுரையின் பேரில்தான் நேதாஜியுடன் பார்வர்டு ப்ளாக்கில் இணைகிறார். 1938 இல் தமிழ்நாட்டு மக்கள் கடுமையான கொடுங்கோல் ஆட்சியில் சிக்கித் தவித்த பின்னரும் தனது ஜாதி மக்கள் கல்வி வாய்ப்பை இழந்த பின்னும் 1939 இல் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் உட்கட்சித் தேர்தல்களில் சீனிவாச அய்யங்காருடன் பணியாற்றிக் கொண்டுதான் இருந்தார்.

## பெரியாரும் தேவர்களும்

1925 முதல் 1933 வரை பெரியாருக்கு உற்ற தோழராக இராமநாதபுரம் ஜில்லா பகுதிகளில் பெரியார் கருத்தக்களை மிகச் துணிச்சலுடன் பரப்பும் பிரச்சார பீரங்கியாக செயல்வீரராகத் திகழ்ந்தவர் சிவகங்கை இராமச்சந்திர சேர்வை ஆவார். திருநெல்வேலி சுயமரியாதை இயக்க மாநாட்டை அவரது தலைமையில்தான் பெரியார் நடத்தினார். சுயமரியாதைப் பிரச்சாரத்துக்கு தென்மாவட்டங்களில் எங்கு தடை என்றாலும் துப்பாக்கியுடன் களத்தில் நிற்கும் தோழனாகத் திகழ்ந்தார். 1933 இல் அவர் மறையும் வரை பெரியாருடன் அவரும் அவரைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோரும் சுயமரியாதை இயக்கத்தில் அளப்பரிய சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். குற்றப் பரம்பரைச் சட்டத்தில் கொடுமைப்பட்ட மக்களை மீட்டது திராவிடர் இயக்கமும் பெரியாரும் தான் என்பது இராமச்சந்திர சேர்வைக்குத் தெரியும். அதனால் தன் குடும்பத்தையும் சொந்த பந்தங்களையும் பெரியாருக்கு துணையாக்கினார்.

1952 இல் இராஜாஜி மீண்டும் கொல்லைப்புறம் வழியாக ஆட்சியைப் பிடிக்கிறார். தகப்பன் தொழிலையே பிள்ளைகளும் செய்ய வேண்டும் என்ற குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வருகிறார். சுமார் 6000 பள்ளிகளை மீண்டும் இழுத்து மூடினார். குற்றப் பரம்பரையினரின் வாரிசுகள் என்ன செய்ய முடியும்? திருடத்தானே முடியும்? அதை எதிர்த்துக் களம் கண்டவர் - இராஜாஜியை விரட்டி அடித்து குலக் கல்வித் திட்டத்தை ஒழித்தவர் பெரியார். அந்தக் காலத்தில் குலக் கல்வித் திட்டத்தை ஒழிக்க தனது கள்ளர், மறவர், அகமுடையர்களுக்காக தேவர் என்ன செய்தார்?

1956 இல் தஞ்சை மாவட்டம் கண்ணந்தங் குடியைச் சேர்ந்த கள்ளர் சமுதாயத்தில் பிறந்த ஆர்.எஸ். மலையப்பன் என்பவர் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தார். ஒரு நிலச் சிக்கல் தொடர்பாக அவர் எடுத்த நிலைப்பாட்டைக் கண்டித்து அவரை வேலையை விட்டே நீக்கம் செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்ற பார்ப்பன நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர். பெரியார் கொதித்தெழுந்தார். 1956 நவம்பர் 4 ஆம் நாள் திருச்சியில் இதற்காக ஒரு சிறப்பு கண்டனக் கூட்டத்தை நடத்துகிறார். ‘பார்ப்பான் ஆளும் நாடு கடும்புலிகள் வாழும் காடு’ என அந்தக் கூட்டத்தில்தான் முழங்கினார். நீதி கெட்டது யாரால் என்ற தலைப்பில் அந்த உரை நூலாகவே வெளி வந்துள்ளது. அந்த உரைக்காக நீதிமன்ற அவமதிப்புக்காக 1957 ஆம் ஆண்டு பெரியாருக்கு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. கள்ளர் சமுதாயக் கலெக்டருக்காக கடுங்காவல் தண்டனை பெற்றவர் பெரியார். 1960 செப்டம்பர் 17 அன்று பெரியார் பிறந்த நாள் அன்று அதே ஆர்.எஸ். மலையப்பன் பெரியாருடன் ஒரே மேடையில் உரையாற்றினார். இன்று வரை அந்த மலையப்பனின் ஊரிலும் அவரது உறவினர்களின் வீடுகளிலும் பெரியார் சிலையும் பெரியார் படமும் சிறப்பாக வீற்றிருக்கிறது. இன்றும் திராவிடர் கழகக் கோட்டை என்று சொல்லப்படும் பகுதியாக அப்பகுதி உள்ளது. மலையப்பன் விவகாரத்தில் முத்துராமலிங்கத் தேவரின் பங்கு என்ன?

சட்டப்படி கள்ளர்களையும் மறவர், அகமுடையார்களையும் அனைத்து பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களையும் பார்ப்பானின் வைப்பாட்டி மகன்களென்றும் சூத்திரர்களென்றும் இழிவுபடுத்தும் இந்திய அரசியல் சட்டத்தை எரிக்குமாறு 1957 இல் பெரியார் ஆணையிட்டார். நூற்றுக்கணக்கான தேவர்கள் எரித்துச் சிறை சென்றார்கள். இந்த இன இழிவு ஒழிப்புப் போராட்டத்தில் தேவரின் பங்கு என்ன?

மண்டல்குழு அறிக்கைக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பு வழங்கிய 9 நீதிபதிகளில் ஒருவர் தேவர் சமுதாயத்தைச் சார்ந்த நீதிபதி இரத்தினவேல் பாண்டியன். அவர் தனது தனிப்பட்ட தீர்ப்பில் பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் வாழ்வுரிமைக்காக பெரியார் உழைத்த உழைப்பை சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

குற்றப் பரம்பரையில் பிறந்தவரை உச்சநீதிமன்ற நீதிபதியாக்கியது திராவிடர் இயக்கம். அப்படிப்பட்ட உச்சநீதிமன்ற நீதிபதிகளே நினைவுகூறும் பெரியார் பணியை யாரோ சிலர் கேவலமாகப் பேசுவதை ஒரு முக்கியச் செய்தியாக ஒரு பெரியார் தொண்டர் என்பவரே சொல்வது வருத்தத்துக்கு உரியது. கடும் கண்டனத்துக்கு உரியது. குற்றப் பழங்குடி சட்டத்தைப் பற்றியும் அது நடைமுறைப்படுத்தப்பட்ட காலங்களில் அப்போதைய ஆட்சியாளரின் நடவடிக்கைகள், அப்போதைய சமுதாய இயக்கங்களின் செயல்பாடுகள் ஆகிய அனைத்தையும் விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்தால் அச்சட்டம் பற்றிய பல மூட நம்பிக்கைகள் ஒழியும்.

## தமிழ்நாடு பிரிவினையில் தேவரும் பெரியாரும்

1956 இல் நேரு தட்சிணப் பிரதேசம் என்ற ஒரு அமைப்பை உருவாக்க முயற்சி செய்தார். ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகியவை ஒன்றிணைந்த மண்டலமாக அது அமைய இருந்தது. தமிழ் தேசியர்கள் பார்வையில் அது திராவிட நாடு. அதை முத்துராமலிங்கத் தேவர் வரவேற்றார். ‘தென்மாநிலக் கூட்டமைப்பாக’ நான்கு மாநிலங்களும் இணைந்த பகுதியை உருவாக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார் தேவர். பி.டி. இராஜன் தலைமையில் அறிஞர் அண்ணா, ம.பொ.சிவஞானம், நாம் தமிழர் ஆதித்தனார், கம்யூனிஸ்ட்டுகள் உட்பட தமிழ்நாட்டின் 20 அரசியல் கட்சிகளும் எதிர்த்த தட்சிணப்பிரதேசத் திட்டத்தை முத்துராமலிங்கத் தேவர் ஆதரித்தார். மொழிவாரியாக மாகாணங்கள் பிரிவதை எதிர்த்தார். ஆனால் பெரியார் மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிக்க வேண்டும் என்றார். தட்சிணப் பிரதேச திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார். பெரியாரது அறிக்கையில்,

“பொதுவாக ஆந்திரா பிரிந்தத்திலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலை இல்லாமல் போய்விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் (கர்நாடகமும், கேரளாவும்) பிரிவதில் இரண்டு மூன்று காரணங்களால் - சீக்கிரத்தில் பிரிந்தால் தேவலாம் என்கின்ற எண்ணம் தோன்றிவிட்டது. என்ன காரணம் என்றால்,

ஒன்று - கன்னடியனுக்கும், மலையாளிக்கும் இனப்பற்றோ, இன சுயமரியாதையோ, பகுத்தறிவு உணர்ச்சியோ இல்லை என்பதாகும். எப்படியெனில், அவர்களுக்கு வருணாசிரம வெறுப்பு கிடையாது. சூத்திரன் என்பது பற்றி இழிவோ, வெட்கமோ பெரும்பாலோருக்குக் கிடையாது. மத மூட நம்பிக்கையில் ஊறிவிட்டவர்கள்.

இரண்டு - அவர்கள் இருவரும் மத்திய ஆட்சி என்னும் வடவர் ஆட்சிக்குத் தங்கள் நாடு அடிமையாக இருப்பது பற்றியும் அவர்களுக்குச் சிறிதும் கவலை இல்லை. ஆகவே, இவ்விரு துறையிலும் நமக்கு எதிர்ப்பான எண்ணங் கொண்டவர்கள் - எதிரிகள் என்றே சொல்லலாம்.

மூன்றாவது - இவர்கள் இரு நாட்டவர்களும் பெயரளவில் இரு நாட்டவர்கள். ஆனாலும், அளவில் எஞ்சிய சென்னை மாநிலம் என்பதில் 14 மாவட்டங்களில் (ஜில்லாக்களில்) இரண்டே ஜில்லாக்காரர்கள் ஆவார்கள். அப்படி 14 இல் 7 இல் ஒரு பாகஸ்தர்களாக இருந்து கொண்டு, தமிழ் நாட்டின் அரசியல், பொருளாதாரம், உத்யோகம் முதலியவைகளில் 3 இல் 2 பாகத்தை அடைந்து கொண்டு, இவை கலந்து இருப்பதால் நம் நாட்டை தமிழ்நாடு என்றுகூட சொல்வதற்கு இட மில்லாமல் தடுத்து ஆண்டு கொண்டிருக்கிறார்கள்.

இதை நான் ஆந்திரா பிரிந்தது முதல் சொல்லிக் கொண்டே வந்திருக்கிறேன். ஆதலால், இவர்கள் சீக்கிரம் ஒழியட்டுமென்றே கருதி வந்தேன். அந்தப்படி நல்ல சம்பவமாக பிரிய நேர்ந்து விட்டார்கள். ஆதலால் நான் இந்தப் பிரிவினையை வரவேற்கிறேன்” - என முழங்கினார்.

தட்சிணப் பிரதேச எதிர்ப்புப் போராட்டக் குழுவில் பெரியார் வைத்த கருத்துக்கள் மிக முக்கியமானவை. மொழிவாரி மாகாண பிரிப்பு மட்டும் போதாது.

1. மத்திய அரசுக்கு படை, போக்குவரத்து, வெளியுறவு ஆகிய துறைகளைத் தவிர மீதமுள்ள அனைத்துத் துறைகளும் பிரியப் போகும் மொழி வாரி மாகாணங்களுக்கே இருக்க வேண்டும்.
2. பிரியப் போகும் சென்னை மாகாணத்துக்கு ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்ட வேண்டும்.

என இரண்டு முக்கியக் கோரிக்கைகளை முன் வைத்தார். இந்தக் கருத்துக்களுக்கு அப்போதைய நாம் தமிழர் இயக்கத் தலைவர் சி.பா. ஆதித்தனார், தமிழரசுக் கழகம் ம.பொ.சிவஞானம், கம்யூனிஸ்ட்டுகள் உள்ளிட்ட குழுவினர் ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே பெரியார் இக்குழுவில் சேராமல் தனியே போராடினார்.

“திராவிடத்தை அல்லது தமிழ்நாட்டை விட்டு ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள் பிரிந்து போன பின்புங்கூட, மீதியுள்ள யாருடைய ஆட்சேபணைக்கும் இடமில்லாத தமிழகத்திற்கு, தமிழ்நாடு என்ற பெயர்கூட இருக்கக் கூடாது என்று பார்ப்பானும், வடநாட்டானும் சூழ்ச்சி செய்து, இப்போது அந்தப் பெயரையே மறைத்து ஒழித்து பிரிவினையில் சென்னை நாடு என்று பெயர் கொடுத்திருக்கிறதாகத் தெரிகிறது.

இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும் – எந்தத் தமிழனும் அவன் எப்படிப்பட்ட தமிழனானாலும் இந்த அக்கிரமத்தை சகித்துக் கெண்டிருக்க மாட்டான் என்றே கருதுகிறேன். அப்படி யார் சகித்துக் கொண்டிருந்தாலும் என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியாதென்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். தமிழ், தமிழ்நாடு என்கின்ற பெயர்கூட இந்நாட்டுக்கு, சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாதபடி எதிரிகள் சூழ்ச்சி செய்து வெற்றி பெற்றுவிட்டார்கள் என்கிற நிலைமை ஏற்பட்டுவிடுமானால், பிறகு என்னுடையவோ, என்னுடைய கழகத்தினுடையவோ, என்னைப் பின்பற்றும் நண்பர்களுடையவோ வாழ்வு வேறு எதற்காக இருக்க வேண்டும்? என்று எனக்குத் தோன்றவில்லை.”

என்பதுதான் அப்போது பெரியாருடைய நிலைப்பாடு. எல்லோரும் அப்போது வெறும் பிரிவினைக்காக மட்டும் போராடியபோது பிரிவினையோடு உரிமைக்காகவும் போராடியவர் பெரியார்.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் பிற்படுத்தப்பட்டோர் நலனாகட்டும், தாழ்த்தப்பட்டோர் நலனாகட்டும், பெண் விடுதலை, சாதி ஒழிப்பு, பொதுவுடைமை, தேசிய இன விடுதலை, பகுத்தறிவு, மாற்று வாழ்வியல் என எந்த இலக்கை எடுத்துக் கொண்டாலும் அந்த இலக்குகளுக்காகப் போராடுபவர்களுக்கு அடிப்படைப் பாடம் பெரியாரியல், அனைத்துத் தளங்களிலும் போராடுபவர்களுக்கு ஒரு வழிகாட்டி, ஒரு முன்னோடி பெரியார். அவரது சிந்தனைகள் பெரியார் திராவிடர் கழகத்தால் காலவரிசைப்படி தொகுக்கப்பட்டு அச்சிடப்பட்டும் தோழர் வீரமணி அவர்களால் வெளியிடத் தடை செய்யப்பட்டு முடக்கப்பட்டு உள்ளது. பெரியார் சிந்தனைகள் முழுமையாக வெளி வந்தால் தோழர் தா. பாண்டியன், தோழர் திருமாவளவன், தோழர் சீமான் போன்றோர் வினா எழுப்பும் சூழலே வந்திருக்காது.

**– அதி அசுரன்**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 14.01.2010**

# கழகத்தின் பெரியார் நினைவு நாள் நிகழ்வுகள்

24.12.2009 வியாழன் மாலை 6 மணியளவில் வடசென்னை மாவட்ட கழகம் சார்பில் புதுவண்ணை, எ.ஈ.கோயில் அருகில் பெரியார் நினைவு நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. டி.ரவிச்சந்திரன் வரவேற்புரையாற்ற, ஞா. டார்வின் தாசன் தலைமையேற்றார்.எ.கேசவன், வழக்கறிஞர் வேலவன், சி. பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் சு. குமாரதேவன், அன்பு தனசேகர், டிங்கர் குமரன் மற்றும் தோழர்கள் உரையாற்றினர். முன்னதாக சமர்பா குமரன் குழுவினரின் இன எழுச்சிப் பாடல்கள் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், கழகத் தோழர்கள் சி. அருள்தாசு, டேவிட் பெரியார், பாவலர்கீர்த்தி ஆகியோர் இன எழுச்சிப் பாடல்களை பாடினர். தோழர் ஏசுக்குமார் நன்றி கூற, கூட்டம் 10.30 மணியளவில் முடிந்தது. கழகத் தோழர்கள், பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

வடசென்னை மாவட்டத்தில் நடந்த இக்கூட்டத்திற்கு தோழர்களை ஒருங்கிணைத்து, அனைத்து வகையிலும் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்து, கூட்டம் சிறப்புற நடைபெற காரண மானவர் வழக்கறிஞர் சு.குமாரதேவன் என்பது குறிப்பிடத்தக்கது.

24.12.2009 அன்று பெரியார் நினைவு நாளினை முன்னிட்டு காலை 9 மணிக்கு சென்னை அண்ணாசாலையிலுள்ள பெரியார் சிலைக்கு கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் குமார தேவன் ஆகியோர் மாலை அணிவித்தனர். பின்னர், இரு சக்கர வாகனம், ஆட்டோக்கள் என தோழர்கள் 100க்கும் மேற்பட்டோர் ஊர்வலமாக அணிவகுத்து சேத்துப்பட்டு, தியாகராயர் நகர், இராயப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### பழனி

பழனியில் தந்தை பெரியாரின் நினைவு நாளை முன்னிட்டு பழனியாண்டவர் ஆண்கள் கலைக்கல்லூரி, பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் முன்பாக பெரியாரின் உருவப் படம் வைக்கப்பட்டு துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. தோழர்கள், மாணவர்கள் உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர். கழகத் தோழர்கள் வழங்கிய துண்டறிக்கைகள் மாணவர்கள் மத்தியில் நல்ல ஆதரவையும், வரவேற்பையும் பெற்றது. இந்நிகழ்ச்சியில் தோழர்கள் நல்லதம்பி, மருதமூர்த்தி, திருச் செல்வம், கருப்புச்சாமி, இளங்கோவன் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.

### தூத்துக்குடி

தந்தை பெரியார் நினைவுநாள் டிசம்பர் 24 வியாழன் அன்று தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரியில் மாலை 7 மணிக்கு அன்பையா அரங்கில் (சீரணி அரங்கம்) மறைந்த சுயமரியாதை சுடரொளிகள் நாத்திகன் இ. சேதுராமசாமி, நாத்திகம் பி. இராமசாமி ஆகியோருக்கு நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு தலைமையில் ஆழ்வை மனோகரன் மற்றும் ஆழ்வார் தோப்பு பா. முருகேசன் முன்னிலையில் தூத்துக்குடி மாநகரத்தலைவர் சா.த. பிரபாகரன் வரவேற்புரையோடு, கழக மாவட்ட துணைத் தலைவர் வே. பால்ராசு, புரட்சிகர இளைஞர் முன்னணி இரா. தமிழரசன், ஆதித் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் ரா.வே.மனோகர், மகளிர் விடுதலை இயக்கத்தின் தோழர் இந்திரா, கழக மாவட்ட செயலாளர் கோ.சகுமார், ஆதித் தமிழர் பேரவையின் இளைஞரணித் தலைவர் சு.க. சங்கர், கழக தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இ. குமாரசிங் நன்றி கூறினார். கழக மாவட்டப் பொறுப்பாளர்கள் அனைத்து இயக்க பொறுப்பாளர்கள், தோழர்கள், பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### சேலம்

தந்தை பெரியாரின் நினைவு நாளான 24.12.2009 அன்று சேலம் மாவட்டத்தில், மாவட்ட தலைவர் மார்டின் தலைமையில் பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப் பட்டது. மேட்டூர் முத்துராஜ், சேலம் தங்கராசு, வீரமணி, டேவிட், விசு மற்றும் இளம்பிள்ளை முத்து மாணிக்கம் உட்பட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர். இந் நிகழ்ச்சியில் சேலம் உடையாப்பட்டி முருகேசன் தலைமையில் இளைஞர் இயக்கத்தை சார்ந்த தோழர்களும் கலந்து கொண்டனர்.

### திருச்சி

24.12.2009 அய்யா நினைவு நாளன்று திருச்சி துவாக்குடி மலையிலுள்ள அய்யா சிலைக்கு மாவட்டச் செயலாளர் க. செகன்னாதன் தலைமையேற்க, மாவட்ட பொருளாளர் வே. இராசு முன்னிலை வகிக்க, மாவட்ட அமைப்பாளர் சோ. தங்கராசு மாலை அணிவித்தார். கழகத் தோழர்கள் தமிழ்ச் செல்வன், பிரேமா, கருணாநிதி, ஆரோக்கியசாமி, பீட்டர், தமிழச்சி மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 9840940400

## வந்த கடிதம்

தந்தை பெரியாரின் 37வது நினைவு நாளான 24.12.09 வியாழ னன்று ‘குடும்ப அரசியல் மற்றும் வாரிசு அரசியல்’ என ஒரு காகிதத்தில் எழுதி, அதனைத் தீயிட்டுக் கொளுத்தி, அச்சாம்பலை திரு.கி. வீரமணி, எம்.ஏ.,பி.எல்., தி.க. தலைவர், பெரியார்திடல், சென்னை-7 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என்பது எனது கருத்து.

24.12.09 - குடும்ப அரசியல் - வாரிசு, அரசியல் ஒழிப்பு நாளாக அனுசரிப்பது பற்றி பரிசீலியுங்கள்!

**புதுகை க. இராசேந்திரன், சென்னை-41.**

17/12/2009 ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழில் ‘அவசரம்; அவதாரம் எடுத்துவா கிருஷ்ணா’ என்ற தலைப்பில் பகுத்தறிவாளரும், பார்ப்பனரும் நிகழ்த்தும் உரையாடலை வெளியிட்டு, உலகம் வெப்பமயமாகி வருவதைப் பற்றியும், அதன் தீமையையும் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் வாதங்களை எடுத்து வைத்திருப்பது பாராட்டுக்குரியது.

“ஜூ.வி.” கட்டுரைக்கு மறுப்பாக வெளிவந்த உளவு நிறுவனங்கள் பரப்பும் பொய்யை துரோகத்தை அம்பலப்படுத்தி விட்டது.

24.12.2009 ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழில் காஞ்சிக்கு தனி ஆட்சி என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கம் மிக அருமை.

**– க.சொ. சிவசுப்பிரமணியன், வடசேரி, தஞ்சை.**

‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் ஓராண்டுக் கழகத்தின் களப்பணிகளைப் பற்றிய தொகுப்பு, தந்தை பெரியார்தம் பணிகளைப் போலவே சிறப்பாக அமைந்துள்ளது. ஒவ்வொரு மாதமும் கழகம் ஆற்றும் நற்பணிகள் பாராட்டுக்குரியன. அப்பணிகள், மக்களின் அறிவை வளர்க்கவும், அறியாமையைப் போக்கவும், மக்களைப் பெரியாரின் பாதையிலேயே நடத்திச் செல்லவும் வழிகாட்டிகளாக இருந்தன; இருக்கின்றன.

ஈழத் தமிழர்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியும் திரித்தும் கருத்துகளை வெளியிட்டு வந்த இதழ்களுக்கு நெற்றியடிபோல் உண்மைச் செய்திகளை வெளியிட்டதும் ‘புரட்சிப் பெரியார் முழக்க’ந்தான்.

மாவீரர்களின் நினைவு நாளினைக் கொண்டாடியதும், ஈழத்தில் முள்வேலி முகாம்களின் கொடுமைகளை அம்பலப்படுத்தியதும், கழகத் தோழர்கள்தாம். அவர்கள் இனங்காக்கும் இணையற்ற தோழர்களாகத் திகழ்கின்றார்கள்.

பசுவதை தடை சட்டம் கோரி, ஆர்.எசு.எசு.சின் விசுவ மங்கள கோமாதா யாத்திரைக் குழுவினர் சேலம் வந்த போதும், சென்னை சென்றபோதும், கழகத்தோழர்கள் எருமை, ஆடு, கோழிகளுடன் ஊர்வலமாக சென்று எல்லா உயிர்களையும் சமமாக எண்ணும் உணர்வினை வலியுறுத்தியதும் உலகில் எவரும் செய்யாத புரட்சிச் செயலாகும்; பகுத்தறிவை வளர்க்கும் போராட்டமாகும்.

**– பாவை. நடவரசன், ஈரோடு.**

## ‘தமிழ்க் குடிஅரசு’ பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்

**பெரியார் சாதித்துதான் என்ன? :** பெரியாரைப் பற்றி பட்டுக்கோட்டை அழகிரி, திரு.வி.க., அண்ணா, குத்தூசி குருசாமி, திருவாரூர் தங்கராசு, நாவலர் நெடுஞ் செழியன், வே. ஆனைமுத்து, தா. பாண்டியன் உள்ளிட்ட 36 சிந்தனையாளர்கள் தீட்டிய கட்டுரைகளின் தொகுப்பு. ‘செந்தமிழ்க்கோ’ தொகுத்துள்ளார்.1981 ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் வெளி வந்துள்ளது. விலை: ரூ.100/-

பேராசிரியர் எம்.கே. சுப்பிரமணியன் எழுதிய **‘Periyar and Self-Respect Philosophy’** ஆங்கில நூல். விலை : ரூ.50/-

**பெரியார் ஒரு பொருள் முதல் வாதி :** ஆசிரியர் ப. செங்குட்டுவன். 1979 ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் வெளி வந்துள்ளது. ஏ.பி. சனார்த்தனம் அணிந்துரை எழுதியிருக்கிறார். விலை: ரூ.50/-.

**வள்ளுவர் குறளும் ஈ.வெ.ரா. வாழ்க்கையும் :** திருச்சியைச் சார்ந்த திருக்குறள் கவி. எம். சுவாமி.1939 ஆம் ஆண்டு வெளியிட்ட நூல் இது. மறுபதிப்பாக மீண்டும் வெளிவந்துள்ளது. விலை : ரூ.50/-


பெரியார் லட்சியங்களுக்கு படைக்கலன்களாக இந்த அனைத்து நூல்களும் பயன்படக் கூடியவை.

தொடர்புக்கு:
**தமிழ்க்குடி அரசு பதிப்பகம், 14/12, மியான் முதல் தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005. பேசி: 9444321902**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 15th January 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 ஜனவரி 21, 2010 புரட்சி 9 முழக்கம் 2 விலை: ரூ.2.50


## மக்கள் பேராதரவுடன் தலைநகரில் கழகம் எடுத்த

# தமிழர் திருநாள் கலை விழா



கழகக் கோட்டையாகத் திகழும் சென்னை இராயப்பேட்டைப் பகுதியில் தமிழர் திருநாள் விழா, மாபெரும் மக்கள் விழா, கலை விழாவாக கழகத் தோழர்களால் முன்னின்று நடத்தப் பெற்றது. இராயப்பேட்டை வி.எம்.சாலை பெரியார் சிலை அருகே தென்னை, வாழை, பனை, பலா பூத்துக் குலுங்குவதுபோல் அமைக்கப் பெற்ற மிகப் பெரிய அரங்கில் ஜன.12 ஆம் தேதி மாலை தமிழர் திருநாள் விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. காஞ்சி மக்கள் மன்றத்தினரின் பறை இசையோடு நிகழ்ச்சி தொடங்கியது. தொடர்ந்து பகுதி வாழ் சிறுவர்கள், இளைஞர்கள் பங்கேற்ற மாற்றுடைப் போட்டி, நடனம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. ஒரு வார காலத்துக்கு மேலாக பகுதிகளில் 60க்கும் மேற்பட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப் பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசளிப்பு விழா மற்றும் தமிழர் திருநாள் விழா வாழ்த்துரை நிகழ்ச்சிகள் தோழர் தமிழ்ச்செல்வன் தலைமையில் அன்பு தனசேகரன் வரவேற்புரையுடன் தொடங்கின. தோழர்கள் ச. குமரன், அ. இராசா முன்னிலை வகித்தனர்.



சமூக ஆர்வலர் திருமங்கை ஏஞ்சல் கிளாடி, விடுதலை செழியன் (விடுதலை சிறுத்தைகள்), வேளச்சேரி மணிமாறன் (ம.தி.மு.க.), பேராசிரியர் சரசுவதி, திரைப்பட இயக்குனர் எஸ்.பி. ஜனநாதன், விடுதலை இராசேந்திரன், ஆனூர் செகதீசன் உரையாற்றினர். தோழர் ஆர். நல்லக்கண்ணு (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) நிறைவுரை நிகழ்த்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். வாழ்த்துரைத்த தோழர்களுக்கு விழாக்குழு சார்பில் நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

தொடர்ந்து 8.45 மணியளவில் புதுகை பூபாளம் குழுவினரின் - பகுத்தறிவு சமூகப் பிரச்சினைகளை நகைச்சுவையுடன் விளக்கும் ‘நையாண்டி நிகழ்ச்சி’ சிறப்புடன் நடந்தது. நகைச்சுவையுடன் சிந்திக்க வைத்த இந்த நிகழ்ச்சிக்கு பொது மக்களிடம் பேராதரவு காணப்பட்டது. இரவு 11 மணிக்கு தொடங்கிய திரைப்படப் பாடகி சின்னப் பொண்ணு பங்கேற்ற இசையமைப்பாளர் இசையரசு வழங்கிய நாட்டுப்புறப் பாடல், ஈழப் பாடல்களைக் கொண்ட எழுச்சி இசை நிகழ்ச்சி நள்ளிரவு ஒரு மணி வரை நடந்தது. ஆயிரக்கணக்கில் பெண்கள் - ஆண்கள்- குழந்தைகள் திரண்டிருந்து இறுதி வரை நிகழ்ச்சிகளில் மூழ்கினர். கலை நிகழ்ச்சியாளர்களுக்கு கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், விடுதலை இராசேந்திரன், மாமன்ற தி.மு.க. உறுப்பினர் ஆர்.என். துரை ஆகியோர் நினைவுப் பரிசுகளை வழங்கினர். பழந்தமிழர் மரபுப்படி நாட்டுப்புறப் பாடல்களுக்கு பார்வையாளர்கள் பலரும் எழுந்து நடனமாடினர். நிகழ்வுகளில் பார்வையாளராக ஒதுங்காமல், நடனமாடி பங்களிப்பாளராக மாறியது விழாக் கோலமாகவும் மகிழ்ச்சிக் கொண்டாட்டமாகவும் இருந்தது. விழாக்களின் மகிழ்ச்சியோடு - சமுதாய கருத்துகளையும், கலை நிகழ்ச்சிகள் வடிவில் வழங்கப்பட்டதால் மக்கள் மன்றம் பகுத்தறிவு, சாதி ஒழிப்பு, பெண்ணுரிமை கருத்துகளை வரவேற்று உள்ளத்தில் பதிந்து கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

மிகச் சிறப்பான அரங்கத்தையும் மின் விளக்கு ஒலி பெருக்கி அமைப்புகளையும் பகுதி மாமன்ற உறுப்பினர் ஆர்.என். துரை, தனது சொந்த செலவில் அமைத்துத் தந்தார். கழகக் களப்பணியில் உயிர் நீத்த தோழர்கள் பத்ரி நாராயணன், குமார், கண்ணன் நினைவு சுழல் கோப்பைகள் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு வழங்கப்பட்டன.

விழாக் குழு வில் இடம் பெற்று அயராது உழைத்த தோழர்கள்:

கு. அன்பு தனசேகர், த.ப.சி. குமரன், எ. கேசவன், இரா. உமாபதி, செ. குமரன், சு. ஆனந்த், ச. சரவணன், ச. சபரி, கோ. சீனு, மா.செல்வம், பா. விஜி, ஏ. சம்பத், சு. பிரகாசு, க. சுகுமாறன், ந. சுதாகர், பா. கணேசன், மாஸ்டர் தங்கப்பன், கேட்ரிங் மோகன், வி. தீபக், வி. செயராமன், ம. தம்பிதுரை, செ. கோபி, இராணன், ஆட்டோ சரவணன், கோ. தமிழரசு, செ. மோகன், க. கார்த்திக், பா. செல்வகுமார், கு. குமரேசன், தனஞ் செழியன், சித்தார்த்தன், அய்யனார், ந.சுபாசு, மே. செய்குமார், சேத்துப்பட்டு இராசன், கேஸ் இரவி, அறிவாளி, க. பாலாஜி, ம. தமிழ்ச்செல்வி, மார்க்கெட் கோபி. தோழர் ஆர். நல்லக்கண்ணு நள்ளிரவு 12 மணி வரை நிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்ந்தார்.

கடந்த 10 ஆண்டுகளாக இப்பகுதியில் தமிழர் திருநாள் விழாவை தோழர்கள் கட்சி பாகுபாடின்றி மக்கள் விழாவாக நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. மறைந்த கழக செயல்வீரர் பத்ரி நாராயணன் தொடங்கி வைத்த இந்த விழா, அவரது அடிச்சுவட்டில் ஆண்டுதோறும் மேலும் மேலும் சிறப்போடு கழகச் செயல் வீரர்களால், செயலாக்கம் பெற்று வருகிறது. விழாவுக்காக ஒருமாத காலமாக தோழர்கள் இரவும் பகலும் உழைத்தனர்.

**– நமது செய்தியாளர்**

**மேலும் படங்கள் 3 ஆம் பக்கம்**

தலையங்கம்

# தாத்தாக்களை மறக்கும் பேரன்கள்

*தமிழர் சமுதாயம் – பார்ப்பன இந்து சமுகமாக்கப்பட்டதால், சாதி – தீண்டாமை – பெண்ணடிமை – ஆழமாகப் பதிந்து – சமுக ஒடுக்குமுறைகளுக்கு, வலிமையான கட்டமைப்பை நிலைநிறுத்தியதோடு சமுக வளர்ச்சியைப் பின்னோக்கித் தள்ளிவிட்டது. இதை மாற்றியமைக்கப் புறப்பட்டதுதான் பெரியார் கண்ட சுயமரியாதை திராவிடர் இயக்கம். ஆனால், சோகம் என்னவென்றால், பெரியார் இயக்கத்திலிருந்து விலகிச் சென்ற அமைப்புகள், தேர்தல் அரசியல் பயணத்தை மட்டுமே இலக்குவாகக் கொண்டதால், சமுதாயக் கொள்கைகள் படிப்படியாக மறைந்து, இன்று எதிர்திசையில் பயணிக்கும் நிலைக்கு வந்து சேர்ந்துவிட்டன. மீண்டும், வர்ணாஸ்ரம காலம் தலை தூக்கி விடுமோ என்ற அச்சம் உண்மையான சுயமரியாதை உணர்வாளர்களிடம் மேலோங்கி நிற்கும் நிலையில் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி, நீண்ட நெடுங் காலத்துக்குப் பிறகு, இது பற்றி அண்மையில் பேசியிருக்கிறார்.*

*இரண்டு திருமண நிகழ்வுகளில் அவர் பேசியதை சுட்டிக்காட்ட வேண்டும். ஒன்று தி.மு.க.வின் முன்னோடி தலைவர்களில் ஒருவரான மறைந்த திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் இரா. தர்மலிங்கம் அவர்களின் பேரன் திருமணம். திராவிடர் இயக்கத்தின் மூத்த தலைவரான தர்மலிங்கம், தனது மகனுக்கு அன்பழகன் என்று பெயர் சூட்டினார். இது இரண்டாவது தலைமுறை. பொதுப் பணித் துறையின் தலைமைப் பொறியாளராக இருக்கும் அன்பழகனோ, தனது மகனுக்கு சூட்டியுள்ள பெயர் பிரதீப் என்ற வடமொழிப் பெயர்.*

*இது பற்றி தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி தமது வாழ்த்துரையில் குறிப்பிடும்போது, "வேடிக்கை என்னவென்றால் திராவிட இயக்கத்தின் தாக்கம், தமிழ்ப் பற்று, தமிழ் மீது நாம் கொண்டிருக்கிற வேகம், இவைகள் எல்லாம் ஒரு காலகட்டத்திற்குத்தான், அடுத்து அடுத்து வந்த தலைமுறைகள், மகன், பேரன், பேத்தி என்று இவர்கள் எல்லாம் தாத்தாவினுடைய தமிழ் மொழிப் பற்றை தமிழ் ஆர்வத்தை எங்கேயோ தள்ளிவிட்டார்கள். தாத்தாக்களுக்கு இருந்த தமிழ் உணர்வு எங்கே போயிற்று?" – என்று கலைஞர் கேள்வி எழுப்பியிருக்கிறார். ('முரசொலி' 18.1.2010)*

*இரண்டாவது, சாதி மறுப்பு கலப்பு திருமணத்தை நடத்தி வைத்து கலைஞர் கருணாநிதி பேசியுள்ள கருத்தும் குறிப்பிடத்தக்கதாகும்.*

*"இன்னும் நம் நாட்டில் காதல் திருமணம், கலப்புத் திருமணம் என்பதெல்லாம் வெறும் வரிவடிவங்களாக, வார்த்தை ஜாலங்களாகத்தான் இன்றைக்கு இருப்பதை காண்கிறோம். அதை விடுத்து உண்மையிலேயே காதல் திருமணம் உண்மையிலேயே கலப்புத் திருமணம் நம்முடைய நாட்டில் சமுதாயத்தில் நடைபெற வேண்டும். அதற்கான விளக்கத்தையும் உறுதியையும் நம்முடைய நண்பர்கள், தோழர்கள், தொண்டர்கள் பெற வேண்டும்."*

*"இங்கே தமிழர்களாக கருதுகிறோம். நாம் இந்த விழா முடிந்து மண்டபத்திலிருந்து வெளியேறுகிற நேரத்தில் ஒரு பத்து பேர், இருபது பேர், செட்டியார்களாக,முதலியார்களாக, அய்யர்களாக, இப்படித்தான் குழு குழுவாக சாதி வாரியாகத்தான் இங்கேயிருந்து வெளியே போகிறோம். இந்த அளவிற்குத்தான், தமிழ்நாட்டிலேயே இன்றைக்கும் சாதி மாறுபாடுகள் சாதி வேறுபாடுகள் இருக்கின்றன." – 'முரசொலி' (19.1.2010)*

*இரண்டு கருத்துகளுமே உண்மையானவை. இதை ஏதோ மேடைப் பேச்சாக மட்டும் கருதி விடாமல், சுயமதிப்பீடாகக் கருதி, கவலையுடன் பரிசிலிக்கப்பட வேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம்.*

*தாத்தாக்கள் காலத்தில் சுயமரியாதை இயக்கமும், திராவிடர் இயக்கமும் தொடங்கி வைத்த பண்பாட்டுப் புரட்சிகள், இன்று, மறைந்து கொண்டே போவதற்கு காரணம், இந்தக் கட்சிகளே. அதை வலியுறுத்த, பரப்புரை செய்ய, பின்பற்ற மறந்ததுதான். கட்டியிருக்கும் வேட்டியிலே – தமது திராவிட கட்சியின் அடையாளத்தையும், நெற்றியிலே இந்து வைதீக அடையாளத்தையும் காட்டிக் கொண்டு, வலம் வரும் தொண்டர்களை தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளில் நீக்கமறக் காண முடிகிறது. பார்ப்பனத் தலைமையில் செயல்படும் அ.தி.மு.க. – இதில் முதலிடம். ம.தி.மு.க., தி.மு.க. – அடுத்தடுத்த இடங்களில் நிற்கின்றன. இந்து பார்ப்பன எதிர்ப்பு லட்சியத்தை முழங்கிய அம்பேத்கர் தத்துவத்தை ஏற்ற அமைப்புகளும், இதற்கு விதிவிலக்கு அல்ல.*

*அதிகாரத்தைப் பிடிக்க, அரசியலில் ஓட்டப் பந்தயம் நடத்தி வரும் இந்தக் கட்சிகள், கொள்கை லட்சியப் பார்வைகளுக்கு அழுத்தம் தராமல், அப்படி ஒன்று, ஒரு காலத்தில் இருந்ததே என்பதைக்கூட மறந்துவிட்டு செயல்பட்டதால் இளம் தலைமுறை திசை மாறி நிற்கிறது. கட்சி அமைப்புகளுக்குள்ளேயே சாதியம் தலைதூக்கி நிற்பதையும் பார்க்க முடிகிறது. வலிமையான தகவல் தொடர்பு சாதனங்களை தங்களிடம் கொண்டுள்ள திராவிட கட்சிகள், இந்த சமுதாய மாற்றத்துக்கான சிந்தனைகளையோ, இயக்கத்தின் வரலாறுகளையோ இளம் தலைமுறையிடம் கொண்டு செல்வதில் எந்த முனைப்பும் காட்டுவதில்லை. மாறாக வணிக நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு, சமுக மாற்றத்துக்கான சிந்தனைகளை முனை மழுங்கச் செய்து, பார்ப்பனியப் பயிர் செழிப்பதற்கான நாற்றங்காலாக செயல்படுகின்றன.*

*குடும்பத்தினர், நண்பர்கள் ஒன்று கூடும் – சுயமரியாதைத் திருமண மேடைகளை, சுயமரியாதை கருத்துகளுக்காகப் பயன்படுத்தப்படாமல், கட்சி அரசியல் மேடைகளாக்கப்பட்டதோடு, புரோகிதத் திருமணங்களை ரகசியமாக முடித்துக் கொண்டு, பிறகு, சுயமரியாதை திருமணத்தை நாடகமாக நடித்துக் காட்டும் காட்சிகளும் அரங்கேறி வருகின்றன. குறைந்தது கட்சியின் பொறுப்பாளர்களாக இருப்பவர்களாவது கொள்கை அடையாளத்தோடு வாழ வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை உருவாக்கிடக்கூட இந்தக் கட்சிகள் தயாராக இல்லை. அரசியல் செல்வாக்கோடு சமுகத்தின் 'அந்தஸ்து' பெற்று திகழ்வோர்கூட சாதி வட்டத்துக்குள் திருமணங்கள் நடத்தவே விரும்புகிறார்கள். அப்படி ஏதேனும் சாதி மறுப்புத் திருமண முயற்சிகள் நடந்தால், அதைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கிறார்கள். இவைகள் பற்றியெல்லாம் விரிவாக ஆராயப்பட்டு, தவறுகள் சரி செய்யப்பட வேண்டும்.*

*பெரியாரின் சுயமரியாதை இயக்கமும், திராவிடர் இயக்கமும் வலியுறுத்திய கொள்கைகளில் 'இடஒதுக்கீடு' கொள்கையை மட்டுமே ஏற்றுக் கொண்டு ஏனைய சாதி ஒழிப்பு – பார்ப்பன புரோகித எதிர்ப்பு – பெண்ணுரிமை – பகுத்தறிவு – சமதர்ம கொள்கைகளை படிப்படியாக திராவிட அரசியல் கட்சிகள் கைகழுவிவிட்டதை வெட்கத்தோடு ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.*

*தலை தலைமுறையாக முன்னெடுத்துச் செல்ல வேண்டிய இந்த பண்பாட்டு அடையாளங்களை பார்ப்பனியச் செல்வாக்கில் மூழ்கித் தொலைத்துவிட்ட காரணத்தினால் சமுக அவலங்கள் பல்வேறு வடிவங்களில் தமிழகத்தில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என்பது வேதனையான உண்மை! கலைஞர் கருணாநிதி முன் வைத்துள்ள கருத்துகளை உண்மையாகக் கவலையுடன் தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் அனைத்துமே பரிசீலித்து, சாதி ஒழிப்பு சமுதாயப் பண்பாட்டுக் கருத்துகளைப் பரப்பவும் பின்பற்றவும் முன்வரவேண்டியது மிகவும் அவசியமாகும்.*

# குடும்பக் கட்டுப்பாட்டில் நிகர்நிலை பல்கலைக்கழகம்

*நிகர்நிலை பல்கலைக் கழகத்துக்கான அங்கீகாரம் பெறுவதையே இலட்சியமாகக் கொண்டு நீண்டகாலப் போராட்டத்தை நடத்தினார் - அறக்கட்டளை ஆயுள் செயலாளர் கி. வீரமணி! அந்த ஒரு 'லட்சியத்தை' முன் வைத்தே தமிழகத்தில் ஆட்சிகளுக்கான ஆதரவு எதிர்ப்பு என்ற முடிவுகளைக்கூட அவர் எடுத்தார். ஜெயலலிதாவை தீவிரமாக ஆதரித்ததற்கும் அதுவே பின்னணியாக இருந்தது. ஒரு வழியாக நிகர்நிலை பல்கலைக்கழக அங்கீகாரமும் கிடைத்தது. ஆனால் திடீரென 44 நிகர்நிலை பல்கலையின் அங்கீகரிப்பை மத்திய அரசு ரத்து செய்து விட்டது. அதில் தஞ்சை பெரியார் மணியம்மை அறிவியல் தொழில் நுட்ப மய்யமும் ஒன்று.*

*உச்சநீதிமன்றத்தில் முறையாக செயல்படாத நிகர்நிலை பல்கலைகளுக்கு எதிராக விப்லவ் யாதவ் என்பவர் வழக்கு தொடர்ந்தார். இதனைத் தொடர்ந்து பேராசிரியர் பி.என். தாண்டன் தலைமையில் மத்திய அரசு குழு ஒன்றை அமைத்து நிகர் நிலை பல்கலைக் கழகங்களை ஆய்வு செய்தது. அந்தக் குழு 44 நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் முறையாக செயல் படவில்லை என்று கண்டறிந்து அறிக்கை தந்தது. அந்த அறிக்கையை மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பித் துள்ளது.*

*"இந்தப் பல்கலைக் கழகங்களில் விரும்பத் தகாத நிர்வாகம் நடக்கிறது. தகுதி வாய்ந்த பேராசிரியர் குழுவுக்கு பதிலாக* **குடும்ப உறுப்பினர்களால்** *பல்கலை நிர்வாகம் கட்டுப் படுத்தப்படுகிறது. வரையறுக்கப்பட்ட நெறிமுறைகள் பின் பற்றப்படுவதில்லை" என்று விசாரணைக்குழு குற்றச் சாட்டுகளை சுமத்தியுள்ளது.*

*கி.வீரமணியின் நிகர்நிலைப் பல்கலையிலும் குடும்ப உறுப்பினர்கள் உண்டு. கழகத்தை குடும்பக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது போலவே அதற்கு முன்னோட்டமாக பல்கலைக்கழகத்திலும் மகன், குடும்பத்தினரை நிர்வாகி களாக்கினார்கள். பல்கலைக்கழக நிர்வாக அதிகாரங்கள் - மகன் அன்பு ராஜூக்கு அளிக்கப்பட்டு, அதை, 'விடுதலை' ஏடுகள் வழியாக படங்களாக வெளியிட்டு, விளம்பரப் படுத்தினார்கள். ஆயுள் செயலாளராக பெரியார் அறக் கட்டளையை தனது பிடிக்குள் வைத்துள்ளதுபோல் - அரசு நிதி உதவி பெறும் பல்கலைக் கழகத்தையும் மாற்றிட துடித்தார்கள். இப்போது அங்கீகாரம் ரத்தாகிவிட்டது.*

*வேந்தர், துணைவேந்தர் என்ற பட்டங்களோடு, அதற்கான ஆடைகளோடு பவனி வந்து, படங்களைப் போட்டுக் கொண்டு, பெரியாரின் 'தனித் தமிழ்நாடு' லட்சயத்தை அடைந்துவிட்டதாகவே பூரித்தார்கள். 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்று விழாக்களில் பேசிக் கொண்டு பல்கலைக் கழகத்தை குடும்பமாக்க முயற்சித் தார்கள். ஆனாலும் தி.க. தலைவர் கி.வீரமணி விடமாட்டார். நீதிமன்றத்தின் படிக்கட்டுகளில் ஏறி 'நீதி'யை நிலை நாட்டுவார் என்று எதிர்பார்க்கலாம்! சூத்திர இழிவு ஒழிப்பை விட நிகர்நிலைப் பல்கலைதானே அவருக்கு முக்கியம்!*

# ஜோதிபாசு முடிவெய்தினார்


*95 ஆம் அகவையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஜோதிபாசு கடந்த ஜன. 17 ஆம் தேதி முடிவெய்தினார். 23 ஆண்டுகாலம் தொடர்ந்து மேற்கு வங்கத்தின் முதலமைச்சராக இருந்த பெருமைக்கு உரியவர் ஜோதிபாசு. நிலச் சீர்திருத்தத்தை அமுல்படுத்தி, நிலமற்ற வர்களுக்கு நிலங்களைப் பகிர்ந்தளித்ததன் மூலம், கிராமப் பகுதியில் கட்சிக்கு வலிமையான அடித்தளம் உருவாகி, அதுவே மார்க்சிஸ்ட் கட்சியின் பலமாகத் திகழ்ந்தது. அரசு எனும் சுரண்டல் நிறுவனத்தை வெற்றிகரமாகக் கையாண்ட மார்க்சிஸ்ட்டாக ஜோதிபாசு செயல்பட்டார். கூட்டணி கட்சிகளை மோதல் போக்கின்றி வழி நடத்திச் செல்லும் சாதுர்யமும் திறமையும் அவரிடம் இருந்தது.*

*இந்தியாவின் பிரதமராகும் வாய்ப்பு அவருக்கு வந்த போது, கட்சியின் தலைமைக்குழு அதற்கு ஏற்பு வழங்கிட வில்லை. மீண்டும் பிரதமராகப் பொறுப்பு ஏற்க வி.பி.சிங்கை காங்கிரஸ் அல்லாத அணிகள் வலியுறுத்தியபோது, அதை ஏற்க மறுத்த வி.பி.சிங், ஜோதிபாசு பெயரை அப்பதவிக்கு முன் மொழிந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஜோதிபாசு தாம் ஏற்றுக் கொண்ட மார்க்சியத்துக்காக தனது வங்காளி அடையாளத்தை இழந்து விடாமல் உறுதியாக நின்றதே, அவரது பலமாக இருந்தது. ஆனாலும்கூட அமைச்சரவை யில் தலித் பிரதிநிதித்துவம் தரப்படவில்லை என்ற விமர்சனமும், பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவினரே மேற்கு வங்கத்தில் இல்லை என்று கூறி, நீண்டகாலம் பிற்படுத்தப் பட்டோர் இடஒதுக்கீட்டை அமுல்படுத்த அவர் மறுத்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.*

*சமூகநீதிக்கு எதிரான இந்த அணுகுமுறைக்காக அவர் கடும் விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கம்யூனிஸ்டுகளுக்குரிய எளிமை - அர்ப்பணிப்பு - உயர்ந்த பண்புகளுடன் பொது வாழ்க்கைக்கு பெருமை சேர்த்த தலைவராக திகழ்ந்தவர் ஜோதிபாசு.*

# தலைநகர் விழா காட்சிகள்









PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# நீலகேசியின் வேத பார்ப்பன எதிர்ப்பு

‘நாத்திகம் பேசும் சூத்திரச்சியே’ எனும் தலைப்பில் சிறு வெளியீடு ஒன்றை வெளியிட்டிருக்கிறார், குத்தூசி குருசாமி. வரலாற்று ஆசிரியர் குருவிக்கரம்பை வேலு தமிழ்க் காப்பியங்களில் ஒன்றான ‘நீலகேசி’யில் அடங்கியுள்ள ‘வேதவாதச் சருக்கம்’ என்ற பகுதியை சுருக்கமாக முன்வைக்கிறது, இந்நூல்.

நீலகேசி, கி.பி.6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என கருதப்படுகிறது. குண்டலகேசி எனும் பவுத்த காப்பியத்துக்கு மறுப்பு சொல்லும் வகையில் எழுதப்பட்ட சமண நெறியைப் பரப்பும் நூல் இது. இதன் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. விவாதங்களை முன் வைத்து எழுதப்பட்ட பல தமிழ் நூல்கள் அழிக்கப்பட்டு விட்டன. அப்படி அமிழ்ந்துபோய் கிடைக்கப் பெறாத விவாத நூல்கள் பிங்களம், அஞ்சனம், தத்துவ கரிசனம், காலகேசி போன்றவையாகும். பவுத்த சிந்தனைகளை விவாதங்களோடு முன் வைத்த குண்டலகேசியும் கிடைக்கப் பெறவில்லை. குண்டலகேசிக்கு மறுப்பாக வந்த நீலகேசி மட்டும் தப்பிப் பிழைத்துள்ளது. வேத - வைதீகக் கோட்பாட்டை எதிர்த்த பல நூல்கள் அழிக்கப்பட்டுவிட்டன. நீலகேசியில் 31 பாடல்கள் இருந்திருக்கின்றன. ‘அவற்றில் எட்டுப்பாடல்கள் வரிசையாக மறைந்துவிட்டன’ என நீலகேசியின் உரையாசிரியர் பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார் குறிப்பிடுகிறார்.

நீலகேசி ஒரு சமண துறவிப் பெண். வேத வைதீக மறுப்பாளர். காகந்தி எனும் நகரத்தில், பூதிகன் என்ற பார்ப்பான் வேத பாட சாலை நடத்தி வருகிறான். பார்ப்பன மாணவர்கள் படித்தனர். அதன் காரணமாக காகந்தி நகரம் கடுமையான காவலுக்கு உட்பட்டிருந்தது. அந்த பாதுகாப்புகளை மீறி நகருக்குள் ஊடுருவிய நீலகேசி, வேத பாடசாலைக்குள்ளும் புகுந்துவிட்டாள். அங்கே மறைந்து நின்று, பூதிகப் பார்ப்பான், வேதத்தின் பெருமைகளைப் பேசுவதைக் கேட்டாள். “வேதம் ஆதியானது; தானாகத் தோன்றியது; அது மனிதர்களால் பாடப்பட்டது அல்ல” என்று பூதிகன் பேசிக் கொண்டிருக்கும்போது ஒளிந்திருந்த நீலகேசி, திடீரென்று, பூதிகன் முன்வந்து நின்றாள்.

பூதிகன் அதிர்ச்சியடைந்தான். “வேதியனே உன்னுடைய வேதத்தின் முடிவான கருத்துகள் என்ன?” என்று வினாக்களை தொடுக்கிறாள் நீலகேசி. வேதத்திலிருந்து தோன்றிய நூல்களைப் பட்டியலிட்டான் பூதிகன். “அப்படியானால் நீ கூறும் வேதத்திலிருந்து தோன்றிய நூல்கள் ஏன் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டுக் கிடக்கின்றன?” என்று எதிர் கேள்வி போட்டாள் நீலகேசி. ஆத்திரமடைந்த பூதிகன் - “அடியேய், சூத்திரச்சியே, நீ வேதங்களை கற்று உணர்ந்து கொள்ளும் தகுதியும், உரிமையும் அற்றவள்; நீ ஒரு சூத்திரச்சி; கீழ் மகள்; ஆகவே நாத்திகம் பேசுகிறாய்” என்று கோபமாகப் பேசுகிறான். நீலகேசி பதிலடி தருகிறாள். “உன்னுடைய வேதப்படியே அசலன் - பசுவுக்குப் பிறந்தவன், சிருங்கி - மானுக்குப் பிறந்தவன், விரிஞ்சி - புலிக்குப் பிறந்தவன், கேச கம்பளன் - நரிக்குப் பிறந்தவன், வசிட்டனும் அவன் தம்பி அகத்தியனும் - அப்பன் பெயர் தெரியாத ஊர்வசிக்குப் பிறந்தவர்கள். உண்மையான தாய் தந்தைக்குப் பிறந்த நானா கீழ்மகள்?” என்று, எதிர்கேள்வி கேட்கிறாள்.

வேதம் - “ஆதியும் - அந்தமும் இல்லாதது என்பது உண்மையானால், அது ஏன், ஒழுக்கக் கேடுகளை ஆதரிக்கிறது? வேதம், கொலை செய்வதை, மது குடிப்பதை, திருடுவதை, வன்முறையில் பெண்களுடன் புணருவதைத் தவறு இல்லை என்று கூறுகிறதே” என்று கூறி, அதற்கான வேதப் பாடல்களையும் ஆதாரத்துடன் முன் வைக்கிறாள் நீலகேசி.

வேதம் சுயம்புவாக - தானாகத் தோன்றியது என்ற வாதத்தை, ஒரு உதாரணத்தை சுட்டிக்காட்டி மறுக்கின்றாள். ஒருவன் ஒரு ஊரின் நடுவில் உள்ள வீட்டின் முன்புறத்தில் எவரும் இல்லாத நேரத்தில் மலம் கழித்துவிட்டு போய் விடுகிறான். மலத்துக்கு சொந்தக்காரன் அங்கு இல்லை. மலம் மட்டும் இருக்கிறது. எனவே மலம் தானாகத் தோன்றியது என்று கூற முடியுமா? வேதமும், அந்த மலம் போன்றதே. மருத்துவர்கள், அந்த மலத்தைச் சோதித்து, மலம் கழித்தவன், நோயற்றவனா? நோய்வாய்ப்பட்டவனா என்று கூறி விடுவார்கள். ஆனால், அந்த மலத்துக்கு சொந்தக்காரன் பிரம்மாவின் வாயில் பிறந்தவனா? தோளில் பிறந்தவனா? தொடையில் பிறந்தவனா? காலில் பிறந்தவனா? என்று கூற முடியாது. ஆனால் அவர்கள் அறிஞர்களா? அறிவீலிகளா? என்பதை நன்கு ஆராய்ந்து அலசிச் சொல்லிவிட முடியும் என்று அறிவார்ந்த வாதங்களை அடுக்குகிறாள் நீலகேசி.

பிரம்மாவின் நான்கு உறுப்புகளிலிருந்து, நான்கு வகையான வருணத்தவரும் பிறந்ததாகக் கூறுவதைக் கேள்வி கேட்கிறாள் நீலகேசி. பிரம்மாவின் உறுப்புகளிலேயே ஏன் இந்த வேறுபாடு? பலா மரத்தில் வெவ்வேறு பகுதிகளான வேர், அடிமரம், கிளை, நுனிக்கொம்பு ஆகியவற்றில் காய்த்துக் கனிந்த பலாச்சுளையில் இனிப்பு ஒரே அளவாக உள்ளதே! பலாச்சுளையை சுவைத்துப் பார்த்துள்ளாயா? உன் பிரம்மா, பலா மரத்துக்கு உரிய தகுதிகூட அற்றவனா?” என்று கிடுக்கிப் பிடி போடுகிறாள் நீலகேசி.

நீங்கள் பலி கொடுக்கும் உயிர்களை தேவர்கள் ஏற்கிறார்கள் என்றால், அவர்களும் கயவர்களே. அப்படிப்பட்ட கயவர்கள், உங்களுடைய தீவினையை கேடுகளை எப்படிப் போக்குவார்கள்? தேவர்களே, தங்களுக்குத் தேவையான உயிரினங்களைக் கொன்று சாப்பிடுவதை யார் தடுத்தார்கள்? நீண்ட தொலைவில் இருந்து கொண்டு, உணவுக்காக உங்களிடம் தேவர்கள் கையேந்துவது இழிவு அல்லவா? உங்களுடைய சுயநலத்துக்காக நீங்கள் தேவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறீர்கள்” என்று நீலகேசி வாதிடுகிறாள். வேதத்தை எதிர்த்தால் ‘நாத்திகர், சூத்திரர்’ என்று பார்ப்பனர்கள் இழிவுபடுத்தும் போக்குக்கு இலக்கியச் சான்றாக நீலகேசி விளங்குகிறது. பூதிகன் எனும் பார்ப்பான் கூறுவதாக அமைந்துள்ள பாடல் இது.

“**நாத்திகம்** அல்லது சொல்லலை யாயின் முன் நான் பயந்த
சாத்திரமாவது வேதம் அன்றோஅதுதான் சுயம்பு
**சூத்திரீ** நீயது வல்லைய லாமையின் சொல்லுகிலாப்
போத்தந்தி யோஅதன் தீமைஎன் றான் பொங்கிப் பூதகனே.

வேதத்தைக் கற்க தகுதியும் உரிமையும் இல்லாத சூத்திரச்சி, நாத்திகம் பேசி, வேதத்தைக் குறைகூறும் தகுதி இல்லை. உரிமையற்றவர் வேதத்தைப் படித்ததாலேயே அதில் குறை காணத் தொடங்கிவிட்டான் என்ற கருத்துப்பட மேற்கண்ட பாடல் அமைந்துள்ளது.

நூல் வெளியீடு: குத்தூசியார் பதிப்பகம், 26 விநோத் அவென்யூ, வி.ஜி.பி. லே அவுட், பாகம் 2, உத்தண்டி. பக்:40, விலை: ரூ.20.

# சூரிய கிரகணத்தின்போது மாட்டுக்கறி விருந்து



சூரிய கிரகணத்தின்போது சாப்பிடக் கூடாது என்ற மூடநம்பிக்கையை மக்களிடம் தெளிவுபடுத்தி விழிப்புணர்வு ஊட்டும் பரப்புரையை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் நடத்தினார்கள். சென்னை தியாகராயர் நகர் பகுதி பெரியார் திராவிடர் கழகம், சூரிய கிரகணம் நிகழ்ந்த நாளன்று இந்த விழிப்புணர்வு இயக்கத்தை நடத்தியது. தியாகராயர் நகர் முத்துரங்கன் சாலையில் 15.1.2010 அன்று சூரிய கிரகணத்தின்போது மாட்டுக்கறி விருந்தை தோழர்கள் நடத்தினர். இந்த நிகழ்ச்சிக்கு தென்சென்னை மாவட்ட கழகத் தலைவர் தபசி குமரன் தலைமை தாங்கினார். பெரியார் திராவிடர் கழக துணை தலைவர் ஆனூர் ஜெகதீசன், மாவட்ட துணை தலைவர் அன்பு தனசேகர் உள்ளிட்ட தோழர்கள் பலரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். சூரிய கிரகணம் அன்று சாப்பிடுவதால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்பதை சமூகநீதிக்கான மருத்தவர் சங்கப் பொதுச்செயலாளர் டாக்டர் ரவீந்திரநாத் விளக்கிப் பேசினார்.

மதியம் 12 மணி ஆனதும் கழகத்தினர் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் ரொட்டி துண்டு, மாட்டுக்கறி குழம்பு வழங்கினர். இவற்றை அனைவரும் ருசித்து சாப்பிட்டனர். மாட்டுக்கறி சாப்பிடாதவர்களுக்கு ரொட்டி துண்டும், ஜாமும் வழங்கப்பட்டது. ஒரு மேஜையில் பெரியதாக இரண்டு இலைகளை போட்டு அதில் சாப்பாடு, மாட்டுக்கறி குழம்பு ஊற்றப்பட்டது. இதை ஏராளமான பேர் போட்டி போட்டு சாப்பிட்டனர். பாதுகாப்பாக சூரிய கிரகணத்தை பார்க்கும் வகையில் பாதுகாப்பு கண்ணாடி வழங்கப்பட்டது. இந்த கண்ணாடியை அணிந்து ஏராளமான பேர் சூரிய கிரகணத்தை பார்த்து மகிழ்ந்தனர்.

## பொதுத் தொண்டு

மனிதன் மற்ற மிருகங்களைப்போல் அல்லாமல், மக்களோடு கலந்து ஒரு சமுதாயமாக வாழ்கிறான். சமுதாயப் பிராணியாக வாழும்போது மற்றவர்களுக்கு ஏதாவது தொண்டு செய்துதான் வாழ வேண்டும். மற்றவனிடமிருந்து தொண்டைப் பெற்றுத்தான் வாழவேண்டும். மனிதன் எந்தவிதத்திலாவது சமுதாயத்துக்குப் பயன்பட்டுத்தான் தீரவேண்டும். அந்த முறையில் என்னால் சமுதாயத்திற்கு ஏதாவது செய்யக் கூடுமானால் வாழ வேண்டும், அதல்லாமல் ஏதோ ஓர் ஆள் சோற்றுக்குக் கேடாக வாழ்வதென்றால் எதற்காக வாழவேண்டும்?

பிறப்பதும், சாவதும் இயற்கை. ஆனால், மக்கள் பாராட்டுதலுக்கு உகந்த வகையில் வாழ்தல் வேண்டும். மக்கள் ஒருவரைச் சும்மா போற்ற மாட்டார்கள். நாம் மற்ற மக்களும் போற்றும்படியான வகையில் காரியமாற்ற வேண்டும்.

சுகபோகத்தினால் இன்பம் காண்பதில் பெருமை இல்லை. தொண்டு காரணமாக இன்பம் காண்பதே சிறந்த இன்பமாகும். வாழ்வு என்பது தங்களுக்கு மட்டும் என்று கருதக் கூடாது. மக்களுக்காகவும், தொண்டுக்காகவும் நம் வாழ்வு இருக்க வேண்டும் என்று கருத வேண்டும். – **பெரியார்**


“புரட்சிப் பெரியார் முழக்கம்” **ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 9840940400

**திண்டுக்கல் பயிற்சி முகாம் செய்திகள் அடுத்த இதழில்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 22nd January 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 ஜனவரி 28, 2010 புரட்சி 9 முழக்கம் 3 விலை: ரூ.2.50

## இடஒதுக்கீடே இல்லாத நிகர்நிலை பல்கலைக்கழகங்கள்

# வீரமணியின் கொள்கை துரோகம்

தமிழகத்திலுள்ள 16 நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் உள்பட நாடு முழுவதும் உள்ள 44 கல்வி நிறுவனங்கள் - அவை பல்கலைக்கழகங்களாக நீடிக்கும் தகுதியை இழந்துவிட்டன என்றும், அவற்றுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தைத் திரும்பப் பெறப் போவதாகவும் மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் கூறி இருக்கிறது.

ஏ.சி. சண்முகம், ஜெகத்ரட்சகன், ‘விநாயகா மிஷன்’ சண்முகசுந்தரம், ‘சவீதா’ வீரையன், அய்சரி கணேஷ் போன்ற “கல்வி வள்ளல்கள்” நடத்தும் கல்வி நிறுவனங்கள் பட்டியலில் திருவாளர் கி.வீரமணி நடத்தும் பெரியார் மணியம்மை பல்கலைக் கழகமும் இடம் பெற்று, பெரியாரின் பெயரை இன்று உலகமயமாக்கி இருக்கிறது.

கற்றறிந்த அறிஞர் பெருமக்களால் நடத்தப் படாமல், குடும்ப உறுப்பினர்களால் நிர்வகிக்கப் பட்டமை, மிகையான கட்டணக் கொள்ளை, தான் தோன்றித்தனமான மாணவர் சேர்க்கை போன்ற பலவிதமான முறைகேடுகளில் ஈடுபட்டு, கல்வியை கடைச்சரக்காக மாற்றிவிட்டதாக, இவற்றை ஆய்வு செய்த குழு குற்றம் சாட்டி யிருக்கிறது.

ஏழை, எளிய மக்களின் கல்வி உரிமையைப் பறித்து, அவர்களுக்கு எட்டாக் கனியாக உயர்கல்வி மாற்றப்பட்டு விட்டதை சமுதாய அக்கறை கொண்ட முற்போக்கு சக்திகளும், நேர்மையான கல்வியாளர் களும் நீண்டகாலமாக சுட்டிக்காட்டி வந்துள்ளனர். இந்த சுயநல சக்திகளுக்கு மறைமுகமாகத் துணை போவதாக மத்திய மாநில அரசுகள் மீதும் குற்றஞ்சாட்டி வந்துள்ளனர்.

தற்போது, தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தெரிவித்துள்ள கருத்துகள் சமூகநீதியில் நம்பிக்கை கொண்டவர்களை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசியல் சாசனம் வழங்கியுள்ள இடஒதுக்கீடு உரிமையை இந்த நிறுவனங்கள் பின்பற்ற முன்வரவில்லை. மத்திய மாநில அரசின் சட்டங்கள், இடஒதுக்கீடு, கட்டணம் குறித்த ஆணைகளுக்கு இந்த நிறு வனங்கள் கட்டுப்படவில்லை. நிகரற்ற அதிகாரங் களோடு செயல்பட்ட இந்த தனியார் நிறுவனர்கள், **ஒற்றைச் சாளர முறையில் கவுன்சிலிங் மூலம் மாணவர்களைச் சேர்க்க அவற்றின் 65 சதவீத இடங்களைக் கேட்டபோது, ஒரு பல்கலைக் கழகம் கூட தனது இடங்களை அரசுக்கு ஒதுக்க முன்வரவில்லை.**

மொத்தத்தில் தான்தோன்றித்தனமாக அவை செயல்பட்டதாக குமுறலை வெளிப்படுத்தியிருக் கிறார். இந்த குற்றச்சாட்டுக்களுக்கு வேந்தர் வீரமணி யின் தரப்பில் இருந்து பதிலேதும் வரவில்லை. மாறாக, ஆய்வு செய்து அறிக்கை அளித்த அறிஞர்கள் மீது வசவுதான். அவர்களை நாயினும் கீழாக வசைமாரி பொழிந்து, தனது கொள்கைப் பற்றையும் விசுவாசத்தையும் காட்டி யிருக்கிறார் ஒருவர்.

- **“இடஒதுக்கீட்டுக்கு - சமூக நீதிக்குப் புறம்பாக நாங்கள் செயல்படவில்லை; அரசாங்கமோ தாழ்த்தப்பட்ட மாணவர்கட்கு 18 சதவீதம்தான் ஒதுக்கீடு, நாங்களோ எங்களுக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, 50 சதவீத ஒதுக்கீடு தந்தோம்” என்று வீரமணி பட்டியலை வெளியிடு வாரேயானால் பாராட்டலாம்.**
- **“அரசோ ரூ.32500 தான் ஆண்டுக்கு வசூலிக்க வேண்டும் என்கிறது. நாங்கள் அதைவிட குறைந்த கட்டணம்தான் வசூலித்தோம்” என்று வேந்தர் வீரமணி கூறியிருப்பாரே யானால், நாடு அவரை மெச்சும்.**
- ஆனால், விடுலையின் சட்டாம்பிள்ளைகளிடம்

(2ஆம் பக்கம்)

# காந்தி இறக்கும்போது ‘ஹே ராம்’ சொன்னாரா?

காந்தியின் வயிற்றில் கோட்சேயின் குண்டுகள் பாய்ந்தவுடன், காந்தி ‘ஹே ராம்’ என்று கூறிக் கொண்டே சாய்ந்தார் என்று ஒரு கதை கூறப்படுகிறது. புதுடில்லியில் உள்ள காந்தி நினைவிடமான ‘ராஜ் காட்டில்’ காந்தி நினைவாக நிறுவப்பட்ட கல்வெட்டில், ‘ஹே ராம்’ என்ற வாசகமே, அவர் கடைசியாக கூறியதைப்போல பொறிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் – காந்தி, குண்டு பாய்ந்து சாய்ந்த போது ‘ஹே ராம்’ என்று கூறினார் என்பதற்கு, எந்த ஆதாரமும் இல்லை. ‘வீக்’ ஆங்கில வார ஏடு, ‘பொய்யான நம்பிக்கைகள்’ என்ற தலைப்பில் நாட்டில் நம்பப்படும் மாயை களைப் பற்றிய கட்டுரைத் தொகுப்பு ஒன்றினை வெளியிட்டுள்ளது. (டிசம். 27, 2009) அதில், காந்தி கடைசியாக உதிர்த்த சொல் ‘ஹே ராம்’ என்று கூறுவது கற்பனையே என்று ஒரு கட்டுரையை வெளியிட்டிருக்கிறது.

காந்தி இறக்கும் போது அவரது வயது 78. ஏற்கனவே உண்ணாவிரதம் இருந்ததால் அவர் மெலிந்து போய் எலும்புகள் வெளியே தெரியுமாறு காணப்பட்டார். கடைசியாக எடுத்த புகைப்படத்தில் அவரது மார்பின் எலும்புக் கூடுகள் வெளியே தெரிந்தன. அவர் பேசும் சக்தியற்றவராகவே இருந்தார். காந்தி ‘ராமராஜ்யம்’ அமைய வேண்டும் என்று விரும்பியவர். அவர் கூறிய ராமராஜ்யம் ‘நேர்மையான சமூகம்’ என்ற அடிப்படையில்தான்!

(நான் கூறும் ‘ராமன்’ வேறு; ராமாயண ராமன் வேறு என்று காந்தியே, கூறியுள்ளார். காந்தியை அவ்வாறு கருத்து மாற்றத்துக்கு உள்ளாக்கியது ‘ரிவோல்ட்’ ஆங்கில வார ஏட்டில் குத்தூசி குருசாமி, இராமாயணம் பற்றி எழுதிய ஆங்கில தொடர் கட்டுரைகள். அந்தக் கட்டுரைகளை குத்தூசி குருசாமி தொடர்ந்து காந்தியாருக்கு அனுப்பி வைத்தார் – ஆர்)

காந்தியின் வழிபாட்டுக் கூட்டங்கள் ‘ராம பஜனையோடு’ தான் முடியும் என்பது உண்மைதான். ஆனால் காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது உடனிருந் தவர்கள், காந்தி ‘ஹே ராம்’ என்று கூறவில்லை என்றே கூறியிருக்கிறார்கள்.

காந்தியின் தனிச் செயலாளராக இருந்தவர் வெங்கிட்ட கல்யாணம். அவர் காந்தி இறக்கும் நேரத்தில் உடனிருந்தவர். கேரளாவில் கொல்லத்தில் அவர் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில், “காந்தி சுடப்பட்டவுடன், அவர் வாயிலிருந்து எந்த வார்த்தையும் வரவில்லை. நான் காந்திக்குப் பின்னால்தான் நின்று கொண்டிருந்தேன்” என்று கூறியுள்ளார். குண்டு பாய்ந்தவுடன், நிலைகுலைந்து கீழே வீழ்ந்தார். கற்பனைகூட செய்ய முடியாத அதிர்ச்சியான சம்பவம். அந்த வழிபாட்டுக் கூட்டத்தில் வெளிநாட்டினரும் கலந்து கொண்டனர். உண்மையில் துப்பாக்கியால் சுட்டகோட்சேயை, தாவிப் பிடித்தவர் ஓர் இளம் அமெரிக்கர்தான். துப்பாக்கி குண்டு பாய்ந்தவுடன், அதிர்ச்சியால் உறைந்து போய் நின்ற அமைதியை தகர்த்தது இந்த அமெரிக்கர் செயல்தான்.”



காந்தி மரணத்தின்போது உடனிருந்த காதரின் ஃபிராங்க் – கடைசி நேர நிகழ்வுகளை பதிவு செய்துள்ளார். “காந்தி உடனே வீட்டிற்குள் தூக்கி செல்லப்பட்டார். அவருக்குப் பின்னால் திரண்டிருந்த கூட்டத்திலிருந்து அழுகுரல், ஓலங்கள் கேட்டன” என்று மட்டுமே அவர் எழுதியுள்ளார்.

காந்தியின் நினைவிட கல்வெட்டை வடிவமைத்தவர் வானு. ஜி. புட்டா (Vanu. G. Bhuta). காந்தி – ராமன் பெயரில் உள்ள ஈடுபாட்டைக் கற்பனையாக்கி, அவர் கல்வெட்டில், அவ்வாறு பொறித்திருக்கக் கூடும். பிரபல சரித்திர ஆய்வாளரும், இந்திரா காந்தி தேசிய கலை மய்யத்தின் இயக்குனருமான ஜியோந்திரா ஜெயினும் (Jyotindra Jain), இதே கருத்தையே கூறுகிறார்.

“காந்தி நாட்டின் செல்வாக்கு மிக உயர்ந்த தலைவர்; அவர் திடீரென்று சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி வந்தவுடன், புராண இதிகாச நம்பிக்கையாளர்களின் உள்ளத்தில், அவரை ராமனுடன் இணைத்தே பார்க்க வைத்திருக்கும்” என்று கூறுகிறார் அந்தப் பேராசிரியர்.

“காந்தி சுடப்பட்டபோது, அவரைச் சுற்றி பெருங்கூட்டம் சூழ்ந்திருந்தது. அந்தக் கூட்டம் அவரிடம் நெருங்கிப் போக துடித்துக் கொண்டிருந்தது. இந்த நிலையில், மரணத்தின்போது அவர் ‘ஹே ராம்’ என்று உச்சரிப்பதற்கான வாய்ப்புகளே இல்லை” என்கிறார், அந்த ஆய்வாளர்.

தலைவர்களை வழிபாட்டுக்குரியவர்களாக்கும் எந்த சமூகமும், தங்களின் கற்பனைப் புனைவுகளை இணைத்துக் கொள்வது வழக்கமானது தான்!”

**தலையங்கம்**

## இது 'மனுதர்மம்' தானே?

காஞ்சிபுரம் கோயிலுக்குள் சங்கர்ராமன் என்ற அர்ச்சகர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், காஞ்சி ஜெயேந்திரன் முதல் குற்றவாளியாகக் கைது செய்யப் பட்டார். இது நடந்தது அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில்! உச்சநீதிமன்றத்தில் போய் பிணை வாங்கி, ஜெயேந்திரன் உள்ளிட்ட குற்றம்சாட்டப்பட்டவர்கள், வெளியே வந்துவிட்டார்கள். உச்சநீதிமன்ற உத்தரவுப் படி, வழக்கு விசாரணை புதுவை நீதிமன்றத்தில் நடக்கிறது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சி மாறி, தி.மு.க. ஆட்சிக்கு வந்தது.

குற்றவாளிகளுக்கு எதிராக அரசு தரப்பு சாட்சிகளாக, நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டவர்கள் 37 பேர், அரசுக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்டவருக்கு ஆதரவாக, பிறழ் சாட்சிகளாகிவிட்டனர். குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான ரவி. சுப்ரமணியம், ஜெயேந்திரரோடு சேர்ந்து, கொலைக்கான சதித் திட்டம் தீட்டியது உண்மையே என்று ஒப்புக் கொண்டு 'அப்ரூவராக' மாறியவர், இப்போது அவரும் காவல்துறை மிரட்டிய தால்தான் அப்படிக் கூறினேன் என்று சாட்சியத்தை மாற்றிக் கொண்டுவிட்டார். ('நக்கீரன்' வார ஏட்டில் கொலை சதித் திட்டம் தீட்டப்பட்டதை தொடர் கட்டுரையாக எழுதிவரும் இதே ரவி. சுப்ரமணியம் தான்)

வழக்கை நடத்தும் அரசு தரப்பு முக்கிய கொலை வழக்கு ஒன்றில் இப்படி எல்லா சாட்சிகளும் தலை கீழாக மாறிவிட்டதைப் பற்றி கவலைப்படவில்லை. கொலை செய்யப்பட்ட சங்கர்ராமன் குடும்பத்தினரும் பின் வாங்கி விட்டார்கள். மிகப் பெரும் கொலைக் குற்றம் தொடர்பான வழக்கு, இப்படி, திட்டமிட்டு சீர்குலைகிறதே என்று எந்தப் பார்ப்பன ஊடகமும் கண்டிக்கவில்லை. தி.மு.க. ஆட்சியும் கவலைப்பட வில்லை. கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ஜெயேந்திரர் மீண்டும் 'ஆசி' வழங்க புறப்பட்டு விட்டார். இந்த கூத்துகள் நடந்து கொண்டிருக்கும் போதே மற்றொரு செய்தியும் வந்துள்ளது.

ராஜீவ் மரணத்தில் குற்றம் சாட்டப்பட்ட நளினி, ஆயுள் தண்டனை பெற்று 17 ஆண்டுகளாக சிறையில் வாடுகிறார். 7 ஆண்டுகள் சிறையில் இருந்த ஆயுள் தண்டனை கைதிகளை விடுதலை செய்த தி.மு.க. ஆட்சி, நளினி விடுதலையை பரிசீலிக்க மறுத்துவிட்டது. பிறகு, நீதிமன்றமே தலையிட்டு, நளினியின் விடுதலையை பரிசீலிக்க குழு ஒன்றை நியமிக்க ஆணையிட்டது. குழுவும் – நளினியை விடுதலை செய்யலாம், சிறையில் அவர் தனது கல்வித் தகுதிகளை உயர்த்திக் கொண்டு நன்னடத்தையுடன் நடந்துள்ளார் என்று, கருத்து தெரிவித்துள்ளதாக செய்திகள் வருகின்றன. சிறை அதிகாரிகளும் விடுதலை செய்யலாம் என்றே கருத்து தெரிவித்துள்ளனர்.

சொல்லப்போனால், ராஜீவ் கொலை வழக்கு விசாரணையே முறையாக நடக்கவில்லை என்று விசாரணை நடத்திய அதிகாரிகளே, இப்போது நூல்கள் எழுதுகிறார்கள். இதில் மறைந்துள்ள சதிகள் பற்றி விசாரிக்க மத்திய அரசு நியமித்த குழுவும், இன்னும் விசாரணையை முடிக்கவில்லை. இவ்வளவு குழப்பங் களுக்கிடையே உள்ள ஒரு வழக்கில், நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட நளினி 17 ஆண்டுகாலம் சிறையில் கழித்த நிலையிலும், அவரை விடுதலை செய்யக் கூடாது என்று, பார்ப்பன ஏடுகள் எழுதுகின்றன. சுப்ரமணிய சாமி நீதிமன்றம் போகிறார்; தி.மு.க. அரசு பரிசீலிக்கவே மறுக்கிறது.

சங்கர்ராமன் கொலை வழக்கில், பார்ப்பன ஜெயேந்திரனைக் காப்பாற்ற சாட்சிகளே பிறழ் சாட்சிகளாகிறார்கள். எந்த எதிர்ப்பும் இல்லை. தி.மு.க. ஆட்சியும் மவுனமாக ஆதரிக்கிறது.

ராஜீவ் கொலை வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டு, 17 ஆண்டு தண்டனை அனுபவித்த பிறகும்கூட, வாழ்நாள் முழுதும் சிறையிலே இருக்க வேண்டும் என்று பார்ப்பனர்கள் துடிக்கிறார்கள். அதே கருத்தையே ஆட்சியும் பிரதிபலிக்கிறது.

குற்றம் சாட்டப்பட்டது பார்ப்பனர் என்றால், சட்டம் வளையும்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் 'சூத்திரர்கள்' என்றால், இயற்கையான நீதியும் மறுக்கப்படும்.

பார்ப்பன செல்வாக்கு தானே ஆட்சி அதிகாரத்தில் இன்றும் கொடி கட்டிப் பறக்கிறது?

இதற்குப் பெயர் 'மனுதர்மம்' தானே; தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

# அமைச்சர் பொன்முடி குற்றச்சாட்டுக்கு பதில் என்ன?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இருந்தோ, வேந்தர் வீரமணியாரிடம் இருந்தோ வெளிப்படையான மறுப்பேதும் இல்லை. அவர்களால் இதற்கு ஆணித்தரமான பதிலேதும் கூற முடியாது.

- **ஏனெனில், அந்தப் பல்கலைக்கழகம் இது காறும் வெளியிட்ட எந்த மாணவர் சேர்க்கை அறிவிப்பிலும் தமிழக அரசின் இடஒதுக்கீட்டின்படிதான் சேர்க்கை நடைபெறும் என்று எங்கேயும் அறிவித்த தில்லை.**

புறம்போக்கு நிலங்களை வளைத்து, கல்லூரி தொடங்கி, அந்தக் கல்லூரியைப் பல்கலைக் கழகமாக ஆக்குவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அதற்காக எந்தக் கட்சி ஆட்சி செய் தாலும் அவர்களுக்குப் பல்லக்குத் தூக்குவதையே அன்றாட வாடிக்கையாக மாற்றி, இப்போது மக்கள் மன்றத்தில் அம்பலமாகி நிற்கிறார், வீரமணி.

அவர் வேந்தர். அவர் மகன் அன்புராஜ், பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் என குடும்ப நிறுவனமாக மாற்றி யதிலும் - தனது ஏகபோக நிர்வாகத்தில் வெளிப் படைத் தன்மை என்பதே கிடையாது என்பதி லும், பிற தனியார் கல்வி நிறுவன அதிபர்களுக்கு, தான் எந்த வகையிலும் வேறுபட்டவர் அல்ல என்பதைக் காட்டி இருக்கிறார். ஆட்சிக் குழுவில் அங்கம் வகிக்க ஆயிரக்கணக்கான பெரியார் தொண்டர்களில் ஒருவர்கூட வீரமணியின் 'ஈரோட்டுக் கண்ணாடிக்கு'த் தெரியவில்லையா என்று கேட்டால், தி.க. தொண்டர்கள் சிலர் கோபித்துக் கொள்வார்கள். எங்கள் வீட்டில் என்ன குழம்பு வைப்பது என்பதை நாங்கள்தான் முடிவு செய்வோம் என்று பகுத்தறிவோடு அறிவார்ந்த வாதத்தை வைப்பார்கள். அந்தோ, பரிதாபம்!

இடஒதுக்கீடே பின்பற்றப்படவில்லை - இவை சமூக அநீதி நிறுவனங்கள் என பொன் முடி கூறிய கருத்துக்கு, ஏ.சி. சண்முகமும் மற்ற 'கல்வி வள்ளல்களும்' கவலைப்படாமல் இருக்கலாம். ஆனால், தனது இறுதி மூச்சுவரை கடைக்கோடி மனிதனுக்கும் சமூகநீதி கிடைக்க வேண்டும் என்று போர் தொடுத்த தந்தை பெரியார் பெயரால் உள்ள கல்வி நிறுவனமும் இப்படித்தானா? என்ற கேள்வி வீரமணி போன்றவர்களை வேண்டுமானால் வெட்கித் தலைகுனிய வைக்காது. ஆனால், லட்சிய உணர்வு கொண்ட பெரியாரின் உண்மைத் தொண்டர் களுக்கு அவமானத்தை அல்லவா தேடித் தந்திருக்கிறார் வீரமணி!

லட்சம் லட்சமாகக் கொட்டிக் கொடுத்து கல்லூரியில் சீட் வாங்க ஏழை, எளிய மக்களில் எத்தனை பேரால் முடியும்? கீழத் தஞ்சையில் விவசாய கூலிகளாக இன்னும் கூரை வீடுகளில் வசிக்கும் எளிய பெரியார் தொண்டனும், மலம் அள்ளும் தொழிலில் அன்றாட வாழ்க்கையை நகர்த்துவதையே போராட்டமாக உள்ள அருந்ததிய சமுதாய தோழனும், தம் பிள்ளைகளை இதுபோன்ற பல்கலைக்கழகங்களில் சேர்ப்பது பற்றி எண்ணிப் பார்க்கவும் முடியுமா?

திருச்சியில் கல்லூரிகளே இல்லை என்ற போது, தாம் சேர்த்து வைத்த 5 லட்சம் ரூபாயை அரசாங்கத்திடம் தந்து கல்லூரி நடத்தச் சொன்னவர் தந்தை பெரியார். அதுதான் பெரியார் ஈ.வெரா. கல்லூரி என்று இன்றும் சிறப்போடு நடந்து வருகிறது. தானே நடத்தி லாபம் பெற வேண்டும் என்று பெரியார் கருதவில்லை.

ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வி பெற, நூற்றுக் கணக்கில் அரசே கல்லூரி தொடங்கு, காமராசர் பள்ளிகளைத் திறந்ததுபோல, மாவட்டந் தோறும் பொறியியல் கல்லூரிகளை அரசின் செலவில் தொடங்கு என்று தானே உண்மை யான பெரியாரியல்வாதி, சமூகநீதி ஆர்வலர்கள் கேட்க வேண்டும்? அதுதானே நியாயம்?

**சமூகநீதிக் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டு, லட்சம் லட்சமாக நன்கொடை பெற்று, கொள்ளை அடிப்பவர்கள் என்று தி.மு.க. அமைச்சர்களாலேயே குற்றம் சாட்டப் படுவர்கள்தான், 'குடிஅரசு' நூலை வெளியிட்டு லாபம் சம்பாதிக்க பார்க்கிறார்கள் என்று பெரியார் திராவிடர் கழகத்தைக் கூச்சமின்றி குறை கூறினார்கள். அதற்காக நீதிமன்றத்தின் படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எத்தனை அவலம்!**

தன் தன்னலமற்ற, தியாக உழைப்பால் தன்னுடைய தொண்டர்களுக்கு, தற்பெரு மிதத்தையும், சுயமரியாதையையும் சமூகத்தில் மதிப்பையும் தேடித் தந்தவர் பெரியார். ஆனால், இன்று தன்னுடைய தலைமையை ஏற்றுள்ள தொண்டர்களுக்கு வீரமணியார் பெற்றுத் தந்திருக்கும் சமூக மரியாதை என்ன?

வல்லம் பல்கலைக்கழகத்தின் சார்பில் 'வாகை சூட வாரீர்' என்று பனிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ஊர்தோறும் சென்று நிகழ்ச்சி நடத்துகிறார்கள். பெரும் பொருட் செலவு செய்து ஆர்ப்பாட்டமாக நடத்தப்படும் இந்த நிகழ்ச்சிகளின் நோக்கம், பெரியாரின் பகுத்தறிவு, சாதி ஒழிப்பு கொள்கை களை இளம் தலைமுறையிடம் பரப்புவதற்காக அல்ல. மாறாக, பள்ளிப் படிப்பு முடிந்ததும் தமது கல்லூரியில் சேரத் தூண்டுவதற்காக!

தன்னலம் மறுத்து, சமூகத்தின் சூத்திர இழிவை ஒழிக்கப் பாடுபட முன் வந்த பெரி யாரின் தொண்டர்களைப் பல்கலைக்கழகத் துக்கு ஆள் பிடித்துத் தரும் ஏஜெண்டுகளாக தி.க. தலைமை மாற்றி இருப்பதுதான் தமிழர் தலைவரின் வாழ்வியல் சாதனை போலும்!

ஒடுக்கப்படுகிற, சுரண்டலுக்கு உள்ளாகிற மக்களுக்கெல்லாம் சுயமரியாதை என்னும் சுடு நெருப்பை அவர்களுக்குள் விதைத்து போராட்ட குணத்தை வார்த்தெடுக்கும் விடுதலைச் சூரியனாக இன்றும் திகழும் தலைவர் தந்தை பெரியார்.

சமூகத் தளத்தில் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய அண்ணல் அம்பேத்கர், டி.எம்.நாயர், சர். பிடி. தியாகராயர், பட்டுக்கோட்டை அழகிரி, குத்தூசி குருசாமி, சர். ஏ.டி. பன்னீர் செல்வம், ஜே.எஸ். கண்ணப்பர் போன்றோர் எல்லாம் தந்தை பெரியாரின் தோழர்கள்.

ஆனால், வீரமணியின் தோழர்கள், ஏ.சி. சண்முகம், ஜெகத்ரட்சகன் வகையறாக்கள் என்பது அவமானகரமானது அல்லவா?

தான் விழுந்து விழுந்து ஆதரிக்கும் தி.மு.க. அரசே - உச்சந்தலையில் குட்டு வைத்திருக்கிறதே, என்ன சொல்லப் போகிறார் வீரமணி!

**– இராசேந்திரன்**

## சீர்காழியில் கழக சார்பில் தமிழர் திருநாள்

சீர்காழி நகரம் பூந்தோட்ட தெரு ஊடியகாரன் தோப்பில் 15.1.2010 வெள்ளி மாலை 6 மணியளவில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் தமிழர் திருநாள் பொங்கல் பெருவிழா பொதுக்கூட்டம் சீர்காழி நகர துணை செயலாளர் க.க. அனந்தராசு தலைமையில் நடந்தது. தமிழ்நாடு மாணவர் கழகத்தின் நகர வேலவர் ப. அருண் வரவேற்றார். கொள்ளிட ஒன்றிய தலைவர் நந்த. இராசேந்திரன், தி.மு.க. நகர துணை செயலாளர்கள் கோ. விஜயகுமார், பெருமாள், மா.பெ.பொ.க. நகர செயலாளர் கோ. செயராமன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் மல்லிகா பரமசிவம், கதிரை நீலமேகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பெரியார் தி.க. தலைமைக் கழக பேச்சாளர் காவை இளவரசன், மந்திரமா தந்திரமா அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடத்தினார். மாவட்டத் தலைவர் இரா. பரசுராமன் சிறப்புரையாற்றினார். காலை நடைபெற்ற விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. 100க்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு பேனா, ஜாமன்ட்ரி பாக்ஸ், நோட்டுகள் ஏராளமாக வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் திருக்குறள் ஒப்புவித்தல், பேச்சுப் போட்டி, நடன போட்டிகளில், பகுதி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# இளைஞர்களை தயார் செய்த திண்டுக்கல் பயிற்சி முகாம்



திண்டுக்கல் மாவட்ட பெரியாரியல் பயிற்சி முகாம், ஜன.9, 10 தேதிகளில் திண்டுக்கல் அருகே உள்ள காட்டு மடம் அ.இ.எம். பயிற்சி மய்யத்தில் சிறப்புடன் நடந்தது. 20 பெண்கள் உட்பட 75 தோழர்கள் இரண்டு நாள் பயிற்சியிலும் பங்கேற்றனர். நகர்ப்புறத்தின் ஆரவாரமின்றி, அமைதியான இயற்கைச் சூழலில் நடந்த பயிற்சி முகாமில் மாணவிகள் பேரார்வத்துடன் பங்கேற்று அய்ய வினாக்களை எழுப்பி, விவாதங்களின் ஊடாக கருத்துத் தெளிவு பெற்றது குறிப்பிடத்தக்கது.

9 ஆம் தேதி சிற்பி ராசன் 'புராணங்கள்' எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். புராண ஆபாசங்களை விளக்கி கற்பனையான மூடக் கதைகள் வழியாக பார்ப்பனியம் தன்னை நிலைநிறுத்திக் கொண்டதை ஏராளமான செய்திகளுடன் சிற்பி ராசன் விளக்கினார்.

மதிய உணவைத் தொடர்ந்து, சிற்பி ராசன் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகளை நடத்தி, சாமியார்கள் மக்களை ஏமாற்றும் 'தந்திரக் கலைகளை' அம்பலப்படுத்திக் காட்டினார். தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'பெரியாருக்கு முன்பும், பின்பும்' என்ற தலைப்பில் விரிவாக வகுப்பு எடுத்தார்.

இரண்டாம் நாள் 10 ஆம் தேதியன்று பேராசிரியர் சரசுவதி 'பெரியாரும் பெண்ணுரிமையும்' எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'கடவுள்' பற்றி வகுப்பு எடுத்தார். மதிய உணவைத் தொடர்ந்து, மீண்டும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'கழகம் கண்ட களங்கள்' என்ற தலைப்பில் கழகத்தின் போராட்டங்களை விளக்கிக் கூறினார்.

ஒவ்வொரு வகுப்பிலும் பயிற்சியளித்த பாடங்களிலிருந்து தோழர்களிடம் 5 கேள்விகள் கேட்கப்பட்டன. சரியாக விடை கூறியவர்களுக்கு சிற்பி ராசன் எழுதிய பகுத்தறிவு நூல்கள் பரிசாக வழங்கப்பட்டன. மாலை 5 மணியளவில் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பயிற்சிக்கு முன்னின்று ஏற்பாடு செய்த மாவட்ட செயலாளர் துரை சம்பத் அனைவருக்கும் நன்றி கூறினார்.

மாவட்டத் தலைவர் ரவண்ணா, செயலாளர் துரை. சம்பத், நெய்க்காரப்பட்டி நல்லத்தம்பி, திண்டுக்கல் தாமரைக் கண்ணன் ஆகியோர் பயிற்சி முகாம் சிறப்புடன் நடைபெற முன்னின்று செயல்பட்டார்கள்.

**– நமது செய்தியாளர்**

## சேலத்தில் தொடர் பரப்புரை கூட்டங்கள் எதிரொலி: கழகத்தில் புதிய இளைஞர்கள்

சேலம் மாவட்டத்தில் தந்தை பெரியார் 36வது நினைவு நாள் சாதி ஒழிப்பு, பகுத்தறிவு பரப்புரை 8 நாட்கள் தொடர் கூட்டமாக நடைபெற்றது. 05.01.2010 முதல் 12.01.2010 வரை, சிவசக்தி நகர், குகை, 9 ஆம் பாரி, கருங்கல்பட்டி, வலசையூர், உடையாபட்டி, வாழப்பாடி, தாசநாயகன்பட்டி ஆகிய இடங்களில் நடைபெற்ற இக் கூட்டங்களில் தோழர் சிற்பிராசன் மூன்று இடங்களிலும், பெரியார் தி.க. இளைஞரணியின் சேலம் மாவட்ட தலைவர் கோகுல கண்ணன் - 5 கூட்டங்களிலும், 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சி நடத்தினர். சூலூர் வீரமணி, கே.ஆர். தோப்பூர் கண்ணன், பெரம்பலூர் பெரியார் நேசன், கோகுல கண்ணன் ஆகியோர் தலா இரண்டு கூட்டங்களிலும் உடையாப்பட்டியை சார்ந்த கல்லூரி மாணவி சாந்தி, ஒரு கூட்டத்திலும் சிறப்புரை ஆற்றினார்கள். ஒவ்வொரு கூட்டத்தின் முடிவிலும் இரட்டைக் குவளை உடைப்பு போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு பொதுமக்களிடம் வலியுறுத்தப்பட்டது.

9-ம் பாளி திடீர் காலனி என்ற இடத்திலும், வாழப்பாடியிலும், காந்திபுரம் காலனியிலும் பல புதிய ஆதரவாளர்கள் தங்களது முகவரியை கொடுத்து கழகத்தில் சேர விருப்பம் தெரிவித்துள்ளனர். உடையாப்பட்டி, அம்பேத்கர் காலனியில் பல இளைஞர்கள் தங்கள் கையில் கட்டியிருந்த கயிறுகளை அறுத்தெறிந்துவிட்டு சாதி ஒழிப்புக்கு தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

வலசையூர் என்ற இடத்தில் நான்கு பேர் தாமாகவே முன்வந்து பரப்புரையை பாராட்டி நன்கொடை வழங்கினர். இந்த நிகழ்ச்சிக்கு குகை பரமேஸ்வரன், குகை ராஜசேகரன், விசு, மூணாங்கரடு சரவணன், சிவசக்தி நகர் வெங்கடேஷ், அம்பிகாபதி, மாணவரணியை சார்ந்த குமார், மகளிரணியை சார்ந்த சந்திரா, கலைவாணி ஆகியோர் ஒத்துழைப்பை வழங்கினர்.

## சென்னையில் காந்தி படுகொலை கண்டன கூட்டங்கள்

ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்களால் காந்தி படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, சென்னையில் ஜன. 23 ஆம் தேதி சேத்துப்பட்டு, வைத்தீஸ்வரன் தெருவில் கழக சார்பில் கண்டன கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் மற்றும் எழுத்தாளர் மதிமாறன், வழக்கறிஞர் புகழேந்தி, செயபாலன், இரா. உமாபதி, அன்பு தனசேகரன் ஆகியோர் உரையாற்றினர்.

காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட ஜனவரி 30 ஆம் நாள் மாலை 6 மணியளவில் பெரம்பூர் காந்தி சிலை அருகில், காந்தி நினைவு நாள் பொதுக் கூட்டம் கழக சார்பில் நடக்கிறது. இக்கூட்டத்தில் கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் சு. குமாரதேவன் மற்றும் தோழர்கள் உரையாற்றுகிறார்கள்.

### நிகர்நிலை பல்கலைக்கழகம் வேண்டாம்

*– அமைச்சர் பொன்முடி –*

"நிகர்நிலை பல்கலைக்கழகங்களின் பிரச்சினை தொடர்பாக முதலமைச்சருடன் கலந்து பேசி இந்த விளக்கத்தை அளிக்கிறேன். மத்திய அரசு நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் தொடர்பாக எடுத்துள்ள முடிவுகள் வரவேற்கத்தக்கது என்றாலும், ஒரு சில கல்லூரிகளுக்கு மட்டுமே அங்கீகாரத்தை ரத்து செய்ய முடிவு எடுத்து இருப்பது ஒரு சிலருக்கு வேறு விதமான சந்தேகங்களை உருவாக்குகிறது.

எனவே, மத்திய மந்திரி கபில்சிபல் கூறியிருப்பது போல ஒட்டு மொத்தமாக நிகர்நிலை பல்கலைக் கழகங்களுக்கான அனுமதி வழங்கும் விதியையே மாற்ற வேண்டும் என்பதையே தமிழக அரசும் முன்பே வலியுறுத்தி இருக்கிறது. ஆகவே நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் என்ற பெயரில் நிகரற்ற அதிகாரங்களை கொண்டு விளங்கும் இது போன்ற பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி வழங்குவதை முழுவதுமாக நிறுத்த வேண்டும் என்று 19.06.2009 அன்று கபில் சிபலிடம் தமிழக அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டது."

**– 'தினத்தந்தி' 24.1.2010**

### எதிர்ப்பவர்கள் நன்றி கெட்ட நாய்கள்

*–'விடுதலை' கூறுகிறது –*

நிகர்நிலைப் பல்கலையை எதிர்ப்பவர்கள் நன்றி கெட்ட நாய்கள் என்று - கூறுகிறது 'விடுதலை' கட்டுரை

"நன்றி கெட்ட நாய்கள் சில குரைத்துள்ளன. நாய்களுடன்கூட ஒப்பிடக் கூடாது. நாயாவது மோப்பம் பிடித்து ஆராய்ந்து பார்க்கும். எலும்புத் துண்டுக்கு ஆசைப்பட்டோ, இல்லை வேண்டாதவர்களின் வம்புப் பேச்சின் உண்மையை அறியாமலோ, இல்லை பதவி மமதையிலோ எந்த நோக்கத்துடனோ செயல்பட்டுள்ளது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. தாங்கள் அமர்ந்துள்ள நாற்காலிகளை அசிங்கப்படுத்தும் இந்த அதிகார வர்க்கங்கள் தங்கள் வக்கிரப் புத்தியை ஒதுக்குவது அவர்களுக்கும் நல்லது. மக்களுக்கும் நல்லது. நேர்மையாக ஆராய்ந்து செயல்பட வேண்டியவர்கள் தவறிழைப்பது பல்லாயிரம் மக்களையும், தமிழினத்தின் முன்னேற்றத்தையும் பாதிக்கிறது என்ற மலை போன்ற உண்மையை உணர முடியாதவர்கள் பட்டங்களையும், பதவிகளையும் தூக்கியெறிய வேண்டும். அல்லது தூக்கியெறியப்படுவார்கள்."

**அமெரிக்க மருத்துவர் சோம. இளங்கோவன் என்பவர் எழுதி, 'விடுதலை' வெளியிட்ட கட்டுரை, 23.01.2010**

### வந்த கடிதம்

புரட்சிப் பெரியார் முழக்கம் 14.1.10 இதழில். "ஒய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் வேலையாம். தமிழக அரசின் விபரீத ஆணை" என்னும் முகப்புக் கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன். "தமிழக அரசின் ஆணை உடனே திரும்பப் பெறவேண்டும். அரசு ஊழியர்களை திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக எதிர்காலத் தலைமுறையின் வாழ்க்கையை இருட்டடித்துவிடக் கூடாது" என அற்புதமாய் எழுதியிருந்தீர்கள்.

**தங்க. சங்கரபாண்டியன்,**
**சென்னை-103.**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ஆலோசனைகள், இலவசம்

***நாட்டில் நடக்கும் சில நிகழ்வுகளைப் பார்க்கும்போது, சில யோசனைகளை இலவசமாக முன் வைக்கலாமே என்று மனது துடித்தது, அதனால் சில இலவச யோசனைகள்.....***

- தீவிரவாதிகள், விமானத்தைக் கடத்தப் போகிறார்கள்; ரயிலைக் கவிழ்க்கப் போகிறார்கள்; பெருநகரங்களுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தப்போவதாக செய்திகள் வருகின்றன. எனவே, நாடு முழுதும் ரயில் நிலையங்கள், விமான நிலையங்களில் பயணிகள் சோதனை செய்யப்படுகிறார்கள். விடுதிகளில், சோதனை சாலைகளில், வாகனங்கள் விடிய விடிய சோதனை; இப்படி ஒவ்வொரு முறையும் 'குடியரசு', 'சுதந்திர நாள்' வரும் போதெல்லாம் மக்களே அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறார்கள்.

  எனவே அரசுக்கு ஒரு ஆலோசனையை முன் வைக்கிறோம். இத்தகைய பயங்கரவாத அச்சுறுத்தல் வரலாம், சட்டம் ஒழுங்கு பாதிப்பு வரலாம் என்று கூறி, காவல்துறையினர், பல நிகழ்ச்சிகளுக்கு அனுமதி தருவதில்லை. அதேபோல் நாட்டின் பயங்கரவாதத்தைத் தடுக்க, சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற - சுதந்திர நாள், குடியரசு நாளையும் காவல்துறை ரத்து செய்து விட்டால், மக்கள் அச்சமின்றி நிம்மதியாக, அன்றாட வாழ்க்கையை கவனிப்பார்களே!

- தமிழ்நாட்டில் 17 நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தை மத்திய அரசு ரத்து செய்துவிட்டதால், பதறிப் போய் நிற்கும் வேந்தர், துணை வேந்தர்களுக்கு அடியேனின் ஆலோசனை!

  நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தை வேண்டுமானால் தாராளமாக ரத்து செய்யுங்கள், பரவாயில்லை. அதற்கு மாற்றாக எங்கள் கல்லூரி வளாகப் பகுதியை சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவித்து விடுங்கள் ! என்ற கோரிக்கையை முன் வைக்கலாமே!

  கல்லூரி வளாகத்தை சிறப்பு பொருளாதார மண்டலமாக்கிவிட்டால், கல்வி வியாபாரம் சிறப்பாக நடக்கும். அரசின் சட்டங்களோ, இடஒதுக்கீட்டுக் கொள்கைகளோ கட்டுப்படுத்த முடியாது; மாணவர்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து ரூபாய்க்கு பதிலாக டாலரில் வர்த்தகம் நடத்தலாம். அன்னியச் செலாவணியும் அதிகரிக்கும். வருமானவரி அதிகாரி சோதனை, தாண்டன் குழு அறிக்கை, கபில்சிபல் கெடுபிடி என்று எந்தத் தொல்லையும் நெருங்க முடியாது. இந்த நல்ல ஆலோசனையை நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தினர் பரிசீலிக்கலாம். எல்லாம் உங்கள் நலனுக்குத்தான்!

- தேசிய பெண் குழந்தைகள் தினத்தையொட்டி பெண் சிசுக் கொலையைத் தடுப்பது தொடர்பாக - மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம், பத்திரிகைகளில் முழுப் பக்க விளம்பரங்களை வெளியிட்டது. அந்த விளம்பரத்தில் மன்மோகன், சோனியாகாந்தி படங்களுக்கு, அடுத்ததாக பாகிஸ்தான் விமானப்படை முன்னாள் தளபதி தன்வீரர் முகம்மது என்பவரின் படம் வெளியிடப்பட்டுள்ளது. விசாரித்தபோது, இந்திய விமானப் படை தளபதி படத்துக்கு பதிலாக, பாகிஸ்தான் விமானப்படை தளபதி படம் தவறுதலாக வெளியிடப்பட்டுவிட்டதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது. இந்தத் தவறுக்கு சமாதானமாக கீழ்க்கண்ட விளக்கத்தை, துறையின் இணை அமைச்சர் தந்துள்ளார்.

  "விளம்பரத்தில் இடம் பெற்றுள்ள புகைப்படம் ஒரு அடையாளம் மட்டுமே. அதில் அடங்கியுள்ள செய்திதான் முக்கியம். எனவே விளம்பரத்தில் இடம் பெற்றுள்ள புகைப்படத்தைப் பார்க்காமல், அதில் இருக்கும் வாசகங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கவேண்டும்" என்று கூறியுள்ளார்.

  சரிதான்; அப்படியே ஏற்று செயல்படுகிறோம். இனிமேல் மத்திய அரசு வெளியிடும் விளம்பரங்களில் உள்ள படங்களைப் பார்க்க மாட்டோம். அதில் உள்ள கருத்துகளை மட்டுமே பார்க்கிறோம். இனி மன்மோகன் படத்துக்கு பதிலாக, சூடான் நாட்டு அதிபரைப் போட்டாலும் சரி, சோனியாவுக்கு பதிலாக சானியா மிஸ்ரா படத்தைப் போட்டாலும் சரி, படங்களைப் பார்க்காமல், கருத்துகளை மட்டுமே பார்க்கிறோம், அய்யா!

  அதேபோல், விளம்பரங்களில் வெளியாகும் கருத்துகளில் தவறு வந்துவிட்டதாக வைத்துக் கொள்வோம்; அப்போது படங்களை மட்டும் பாருங்கள், கருத்துகளைப் பார்க்கக் கூடாது என்று, அமைச்சர்கள் கூறினால், அதையும் பின்பற்ற தயாராகவே இருக்கிறோம்.

  ஆனால் ஒரே ஒரு விண்ணப்பம். கருத்தை மட்டும் பாருங்கள்; அல்லது படத்தை மட்டும் பாருங்கள்; அல்லது இந்த விளம்பரத்தில் அடங்கியுள்ள கருத்து, படம் இரண்டையுமே பார்க்க வேண்டாம்; படிக்க வேண்டாம் என்று 'கறாராக' விளம்பரப்படுத்தி விடுங்கள்.

  அப்போதுதான் அரசு பெரும் தொகை செலவிட்டு செய்துள்ள விளம்பரத்தின் சிறந்த பயன் மக்களுக்குத் தெளிவாகப் போய்ச் சேரும் என்பது அடியேனின் தாழ்மையான ஆலோசனை.

**– கோடங்குடி மாரிமுத்து**

# இலங்கை சபாநாயகருக்கு செருப்படி: கழகத்தினர் கைது

நாகை மாவட்டம் சீர்காழி ஒன்றியம் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு சாமி கும்பிட இலங்கை சபாநாயகர் கோபு பண்டார நாயக் 9.1.2010 அன்று காலை 11 மணிக்கு வருவதாக கழகத் தோழர்களுக்கு தகவல் காலை 9 மணி அளவில் வந்தது. கழகத் தோழர்கள் உடனடியாக கருப்புக்கொடி காட்டுவதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக இறங்கினர்.

பா.ம.க., விடுதலை சிறுத்தைகள் கட்சி, ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய தோழமை அமைப்புகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டு, 11 மணியளவில் 100க்கும் மேற்பட்ட தோழர்கள் திரண்டனர்.

காலை 12.10 மணிக்கு கோபு பண்டாரநாயக் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு வந்தவுடன் தோழர்கள், "தமிழ் இனத்தை அழித்த ராஜபக்சேவின் கைகூலியே தமிழ்நாட்டை விட்டே வெளியேறு, கோபு பண்டார நாயக் ஒழிக" என கண்டன முழக்கம் எழுப்பப்பட்டது.

கடுமையான பாதுகாப்புடன் காவல்துறையினர் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். கோவிலில் இருந்து வெளியில் வந்தவுடன் கோபு பண்டாரநாயக் மீது செருப்புகள் பறந்தன! இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பெரியார் தி.க. மாவட்ட இணை செயலாளர் ரமேசு, மயிலாடுதுறை நகர செயலாளர் அன்பு, சீர்காழி நகர துணை செயலாளர் அனந்தராசு, முரளி, ம.தி.மு.க. சரவணன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி சுரேசு, விடுதலை சிறுத்தைகள் கட்சி ஸ்டாலின், செல்லகண்ணு, தியாக செந்தில்குமார், கண்ணதாசன், தி.மு.க.வை சார்ந்த எழிலரசன் ஆகியோர் கைது செய்யப் பட்டனர்.

இரவு 7 மணியளவில் தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர். தோழர்களை வரவேற்க பெரியார் தி.க., விடுதலை சிறுத்தைகள், ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு, பா.ம.க. மற்றும் இன உணர்வாளர்கள் ஏராளமாக திரண்டு, ஊர்வலமாக வந்து பேருந்து நிலையம் எதிரிலுள்ள அய்யா சிலைக்கு மாலை அணிவித்தனர்.

**செய்தி: பெரியார் செல்வன்**

## கழகத் தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்!

அன்புடையீர்,

வணக்கம். தமிழகத்தில் கிராமங்களில் தலை விரித்தாடும் தீண்டாமைக் கொடுமைகளான இரட்டைக் குவளை உள்ள தேநீர்க் கடைகள், தனிச் சுடுகாடுகள் மற்றும் பல்வேறு வடிவங்களில் நிலவும் தீண்டாமைக் குறித்து, பட்டியலைத் தயாரித்து, விரைவில் கீழ்க்கண்ட முகவரிகளுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கொளத்தூர் மணி,
தலைவர்,
பெரியார் திராவிடர் கழகம்
பெரியார் படிப்பகம்,
மேட்டூர் அணை - 636 401.
(பேருந்து நிலையம் அருகில்)

பெரியார் திராவிடர் கழகம்
தலைமை அலுவலகம்
1, முதல் மாடி
காமராஜர் சாலை
மயிலாப்பூர்
சென்னை - 600 004.

விரைந்து செயல்படுவீர்!

**– பெரியார் திராவிடர் கழகம்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்" ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 9840940400

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 28th January 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.